விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 355 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 23 செவ்வாய்க்கிழமை (09.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நிவாரணப் பொதிகளுடன் யாழில் அமெரிக்க விமானம்



15ஆம் பக்கம் பார்க்க

## டிசம்பர் 16ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பம்

- இடர்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலைகள் ஆரம்பிப்பதை அதிபர்கள் தீர்மானிப்பர்.
- அனைத்து மாணவர்களும் அடுத்த வகுப்புக்குத் தகுதி.

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் விடுமுறை வழங்கப்பட்டுள்ள பாடசாலைகள் எதிர்வரும் 16ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலை அதிபர்கள், கல்வி நிர்வாக

15ஆம் பக்கம் பார்க்க

# இடர்களால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ஐ.நா உதவும்

### இலங்கைக்கான ஐ.நா பிரதிநிதி

(கொழும்பு)

பேரிடர்களால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ஐ.நா தொடர்ந்து உதவும் என இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ உறுதியளித்துள்ளார்.



(02ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பணியில் அரசியல் அழுத்தம்

### கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நிவாரணப் பணிகளின்போது அரசியல் அழுத்தம் காணப்படுவ

15ஆம் பக்கம் பார்க்க

## டிசம்பர் 31ஆம் திகதிக்குள் பொதுப் போக்குவரத்து இயல்பு நிலைக்கு

(கொழும்பு)

டிசம்பர் 31ஆம் திகதிக்குள் பொதுப் போக்குவரத்துச் சேவையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவது அர

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டரங்கு வேண்டும்

### நேற்று கவனயீர்ப்பு : அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு வேண்டுமெனக் கோரி போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கான தேர்வு இன்று 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் சிறிசற்குணராஜாவின் பதவிக்காலம் எதிர்வரும்2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது.

இதன்படி, புதிய துணைவேந்தர் தேர்வுக்கான விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டிருந்த

02ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி செயலணியை ஸ்தாபிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலணியை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலவும் அனர்த்த நிலைமையை முகாமைத்துவம் செய்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்காக இந்தச் செயலணி நியமிக்கப்படவுள்ளது.

அரச பொறிமுறையை பயன்படுத்தி மிகவும் வினைத்திறனான மற்றும் வெளிப்படையான வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்புவதே இதன் நோக்கமென

15ஆம் பக்கம் பார்க்க




## அனர்த்த நிதியை நிர்வகிக்க தேசியக் குழு நியமனம்

(கொழும்பு)

அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் உதவி மற்றும் நிவாரண நிதிகளை நிர்வகிப்பதற்காக, பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர தலைமையில் உயர் மட்ட தேசியக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குக் கிடைக்கும் அனைத்து வெளிநாட்டு நிதிகளையும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்திறனுடனும் நிர்வகிப்பதற்கான பொறுப்பு இந்தக் குழுவிடம்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையின் எஞ்சிய பகுதி ஜனவரி மாதம் கட்டாயம் நடத்தப்படும்

## பரீட்சைத் திணைக்களம் மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையின் எஞ்சிய பகுதி ஜனவரி மாதத்திற்குள் கட்டாயம் நடத்தப்படும் என்றும் மாணவர்கள் திகதி அறிவிப்புக்காகக் காத்திருக்காமல் ஜனவரியை இலக்காகக் கொண்டு தயாராகுமாறும் பரீட்சைத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறித்த அறிவிப்பை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் துல்லியமான தரவுகள் கிடைத்த பின்னரே பரீட்சையை நடத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, ஜனவரிக்குள் அனைத்துத் தரவுகளையும் துரிதமாகச் சேகரிக்கும் பணி நடைபெற்று வருவதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நீர்வேலி மாணவன் சாதனை




ஜோர்ஜியாவில் நடைபெற்ற சர்வதேச மனக்கணிதப் போட்டியில் (UCMAS) நீர்வேலி மாணவன் சுமனன் அப்சரன் இரண்டாம் இடத்தினைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஜோர்ஜியாவின் திபிலிசியில் உள்ள ஜோர்ஜிய தேசியப் பல்கலைக்கழகத்தில் கடந்த 6 ஆம் திகதி குறித்த போட்டி நடைபெற்றது.

இதில் நீர்வேலி கரந்தன் இராமப்பிள்ளை வித்தியாலயத்தில் தரம் 2இல் கல்வி கற்கும் சு.அப்சரசனே இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ம-7)

## 80 வீதமான குளங்களை

# 10 நாட்களுக்குள் சீரமைக்கத் திட்டம்

80 வீதமான குளங்களை 10 நாட்களுக்குள் சீரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிதீவிர வானிலையால் பாதிக்கப்பட்ட சுமார் 218 குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களை மீண்டும் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகளுக்காக 12 பில்லியனுக்கும் அதிகமான நிதி ஏற்கனவே மதிப்பிடப்பட்டுள்ளதாக, நீர்க் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் எச்.எம்.பி.எஸ்.டி. ஹேரத் தெரிவித்தார்.

இதன்படி, எதிர்வரும் 10 நாட்களுக்குள் பெரும்போக விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் வகையில் சேதமடைந்த குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளில் 80 சதவீதத்தைப் புனரமைத்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ம-7)

## இடர்களால்...

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் மார்க் அண்ட்ரூ ஆகியோருக்கிடையில் நேற்று (08) அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்காகவும் ஐக்கிய நாடுகள் சபை உடனடி நிவாரண நிதியத்தின் கீழ் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்த அவர், அந்த நிதியை அதிகாரபூர்வமாக அமைச்சர் விஜித ஹேரத்திடம் கையளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையினால் வழங்கப்படும் உதவியின் கீழ் உணவுப் பாதுகாப்பு, வீடமைப்பு, குடிநீர், கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் மீன்பிடித்துறை ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதற்காக விரிவான மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்காக ஏற்கனவே OCHA அமைப்பின் 05 பேர் கொண்ட குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனர்த்தம் காரணமாக நாட்டு மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம், விவசாயம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேசத்தின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு அவசியம் என அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார். இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவியளிக்கும் நாடுகளுடன் இணைந்து செயற்படுவதற்கு நியூயோர்க் மற்றும் ஜெனிவா ஐக்கிய நாடுகள் அலுவலகங்கள் ஊடாக நடவடிக்கை எடுப்பதாக மார்க் அண்ட்ரூ இதன்போது தெரிவித்தார். (ம-7)

## யாழ்ப்பாண...

நிலையில் பீடாதிபதிகள் மற்றும் முன்னாள் பீடாதிபதிகள் உள்ளடங்களாக ஆறு விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தன.

அதன்படி, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி, உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி சிரேஷ்ட பேராசியர் கு. மிகுந்தன், விஞ்ஞான பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் பு.ரவிராஜன், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன், விஞ்ஞான பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் பிறின்ஸ் ஜெயதேவன் மற்றும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் ஆயியோர் விண்ணப்பித்திருந்தனர்.

விசேட பேரவைக் கூட்டத்தில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் முன்னிலையில் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக்கழக சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்து துணைவேந்தராக ஜனாதிபதி பிரகடனம் செய்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)


# மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 07 - 1972



மறைவு 07 - 12 - 2025

## செல்வராசா அகில்ராஜா

### (பஸ் உரிமையாளர்)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா அகில்ராஜா (அகிலன்) அவர்கள் கடந்த (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் நேசமணி தம்பதியரின் அன்பு மகனும் சதாசிவம் (PHI) - தேவியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயகாமினி அவர்களின் பாசமிகு கணவரும் அபிஷேக், அகீபன், கீர்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயராசா (ரஞ்சன்), றெயினா ஆகியோரின் சகோதரனும் கவிதா, குகதாஸ், விஜயரஞ்சன், குகன், விஜேந்திரன், கெங்காதரன் ஆகியோரின் மைத்துனரும் ஜெனோஜன், ஜெனுஜா, ஜெனிஸ்ரன் ஆகியோரின் மாமனாரும் ஜெர்மிகா, யதுசிகா, ரசித் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2025) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல்இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

075 023 1847

(1783)



# காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ஊரெழு கணேச வித்தியாசாலைக்கு அருகாமை.
- 24 அடிப்பாதை.
- ஊரெழு பிள்ளையார் கோயிலடியில் இருந்து 2 Km தூரம்.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(6102)

தொடர்பு: 074 018 8731 075 412 9203


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதியற்ற கட்டுமானங்களுக்கு இடமில்லை

## உறுதிபடத் தெரிவித்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

**எதிர்காலத்தில் அனுமதியற்ற கட்டுமானங்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும், அதற்கான சட்டங்கள் வலுப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன், இதனைச் செய்யத் தவறினால் நாடு மிகப் பெரிய பேரழிவை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

குருணாகல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிதாக உருவாக்கவுள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி செயலணியின் கீழ் சட்டம் தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்காகத் தனிப் பிரிவு நிறுவ எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் கீழ் அனுமதியற்ற கட்டுமானங்களின் போதான பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகள் காண முடியும் என்றும் தெரிவித்தார்.

குருணாகல் மாவட்டத்தில் சேதமடைந்த அனைத்து மாகாண வீதிகள் மற்றும் பிரதேச சபை வீதிகளையும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் முழுமையாக மறுசீரமைத்து பொதுமக்களின் பாவனைக்கு திறக்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியை இதற்காகப் பயன்படுத்துமாறும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யக்கூடிய பாதைகள் குறித்த தகவல்களையும் தேவையான நிதியையும் அறிவிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, 2026 ஆம் ஆண்டுக்கு அந்த நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, நாடு முழுவதும் உள்ள கால்நடை பண்ணைகள் குறித்த துல்லியமான தரவுகளைப் பராமரிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், தற்போதுள்ள சட்டங்கள் அதற்கு போதுமானதாக இல்லாவிட்டால், அந்தச் சட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும், கால்நடை பண்ணைகள் முறையாகப் பதிவு செய்யப்படாததால் இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் சிக்கல்கள் எழுகின்றன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.(நி)

# பேரிடரால் மன அழுத்தம்; 1926 ஐ அழைக்கவும்

(கொழும்பு)

பேரிடர் காரணமாக மன அழுத்தத்தை அனுபவித்தால், தேசிய மனநல நிறுவனத்தின் 1926 என்ற துரித இலக்கத்தை அழைத்து தேவையான ஆலோசனைகளைப் பெறுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக ராகம மருத்துவ பீடத்தின் சிறுவர் மற்றும் இளம் பருவ மனநல மருத்துவ நிபுணரான பேராசிரியர் மியுரு சந்திரதாச கூறுகையில், இது போன்ற பேரழிவுக்குப் பிறகு, அது நம் மனதை நேரடியாகப் பாதிக்கக்கூடும், இதன் விளைவாக, மக்களிடையே மன அழுத்தம் ஏற்படுவது பொதுவானது.

எனவே நீங்கள் அத்தகைய அழுத்தத்தில் இருந்தால், முதலில் பிரச்சினையை அடையாளம் காண வேண்டும், பின்னர் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க என்ன செய்ய வேண்டும் என்பதற்கான தீர்வை அடையாளம் காண வேண்டும்.

இந்த சூழ்நிலையால் யாராவது கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தால், அருகிலுள்ள அரசு மருத்துவமனையில் மருத்துவரை சந்தித்து தேவையான ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

இந்தப் பேரிடர் காரணமாக சிறுவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளானால், முடிந்தவரை அவர்களின் வாழ்க்கையை இயல்பாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உதாரணமாக, அவர்கள் விளையாடுவதற்கான சூழலை உருவாக்குதல், நண்பர்களைச் சந்திக்க வாய்ப்புகளை வழங்குதல் போன்றவற்றைச் செய்யலாம்.

மன அழுத்தத்தில் இருந்தால், எரிச்சல், தூக்கமின்மை, பசியின்மை மற்றும் சோர்வு போன்ற அறிகுறிகளை நீங்கள் அனுபவிக்கலாம்.

நமது நாடு பல்வேறு சந்தர்ப்பங்களில் இயற்கை பேரழிவுகளையும் பல கடுமையான அனுபவங்களையும் எதிர்கொண்டுள்ளது. தைரியம் மற்றும் விடா முயற்சியே இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப உதவும் என அவர் தெரிவித்தார். (நி)

# எலிக்காய்ச்சல் – (Leptospirosis)

எலிக்காய்ச்சல் நோயானது ஒரு உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற ஒரு தொற்றுநோயாகும். ஒவ்வொரு வருடமும் இந்நோயினால் அண்ணளவாக 10 லட்சம் மக்கள் பாதிக்கப்படுவதுடன் 60,000 இறப்புக்களும் ஏற்படுகின்றன. இத் தொற்று நோயானது கூடுதலாக 20-49 வயதுக்கிடைப்பட்ட பொருளாதார ரீதியான முயற்சிகளில் ஈடுபடுகின்ற ஆண்களையே பாதிக்கின்றது.

இலங்கையில் இத் தொற்று நோயானது வருடம் முழுவதும் மக்களைப் பாதிக்கின்ற அதேவேளை, மழைக் காலத்தில் தீவிர நோய்ப் பரவலை (outhreak) ஏற்படுத்துகின்றது. குறிப்பாக ஒக்டோபர் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையில் கூடுதலான நோய்த்தாக்கம் அவதானிக்கப்படுகின்ற அதேவேளை மார்ச் மாதம் தொடக்கம் மே மாதம் வரையிலும் இந்நோயின் தாக்கம் அவதானிக்கப்படுகின்றது. கூடுதலாக வெள்ளப்பெருக்கினைத் தொடர்ந்து இந்நோயின் தீவிர நோய்ப் பரம்பல் ஏற்படுகின்றது.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் எலிக்காய்ச்சலால் 8 இறப்புக்கள் (20-60 வயது )ஏற்பட்டன.

**எலிக்காய்ச்சல் எவ்வாறு பரவுகின்றது?**

எலிக்காய்ச்சல் நோயானது லெப்ரோஸ்பைறா(Leptospira) என்னும் பக்றீரியாவினால் ஏற்படுகின்றது. குறிப்பிட்ட விலங்குகளின் (எலி, நாய், பன்றி, பசு, குதிரை) சிறுநீரில் காணப்படும் இந்த பக்றீரியாவுடன் மக்கள் தொடுகையுறும்போது கண்கள், மூக்கு, காதுகள் மற்றும் தோலில் உள்ள சிராய்வுகள், வெட்டுக்காயங் களினூடாக பக்றீரியா அவர்களின் உடலினுள் உட்சென்று நோயை ஏற்படுத்துகின்றது

எலிக்காய்ச்சல் நோய்க்குரிய கிருமியை உடைய விலங்குகளின் சிறுநீர் மூலம் மாசடைந்த நீர் மற்றும் மண்ணில் இந்த பக்றீரியா பொதுவாகக் காணப்படுகின்றது. இந்தக்கிருமிகள் பின்னர் ஏனைய விலங்குகள், மனிதர்களுக்குப் பரவுகின்றன.

**எலிக்காய்ச்சல் நோய் பரவக் கூடிய ஆபத்து நிலை அதிகமானவர்கள்**

- வயல்களில் வேலை செய்யும் விவசாயிகள்.
- சேற்று நிலங்களில் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுபவர்கள்.
- ஆறுகள் அல்லது வயல்வெளிகளில் செங்கல் தயாரித்தல் அல்லது மணல் அள்ளுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள்.
- சேற்றுநிலம் அல்லது நீர் தேங்கிய இடங்களில் விளையாட்டு அல்லது செயற்பாடுகளில் ஈடுபடும் மக்கள்.
- இரத்தினக்கல் சுரங்கத்தொழிலாளர்கள்.
- உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்பிடித் தொழில் புரிவோர்.
- சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்.



**எலிக்காய்ச்சல் குணங்குறிகள்**

சாதாரணமாக நோய்க்கிருமி ஒருவரிடம் தொற்றி நோய்க்குரிய குணங்குறிகள் தோன்றுவதற்கு 5-14 நாட்கள் தேவைப்படுகின்றன.

- கடுமையான காய்ச்சல்
- கடுமையான தலைவலி
- தசை நோ
- இருமல்
- மூச்சுவிடுவதில் சிரமம்
- சிறுநீர் வெளியேறும் அளவு குறைதல்
- கண் சிவத்தல்
- தோல் மற்றும் கண்கள் மஞ்சள் நிறமடைதல்
- பாதங்கள் மற்றும் கீழ் கால்களில் அதிக வலி

**எலிக்காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி?**

- சிறந்த கழிவு முகாமைத்துவ குறிப்பாக நீர்நிலைகள் வயல்களுக்கு அருகில் குப்பைகளை குவிப்பதை அல்லது வீசு வதைத் தவிர்த்தல்.
- சிறுவர் விளையாடும் இடங்களிலிருந்து தொலைதூரத்தில் மிருகங்களைப் பேணுதல்.
- வெள்ள நீரில் குளித்தல், முகம் கழுவுதல், கொப்பளித்தல் போன்றவற்றைத் தவிர்த்தல்.
- தோலில் காயங்கள் இருப்பின் வெள்ள நீருடன் தொடுகையுறும் சந்தர்ப்பம் ஏற்படின் அவ்விடங்களை நீர் தொடுகையுறாதவாறு பாதுகாத்தல்
- வயல்களில் வேலை செய்வோர்
- கையுறை சப்பாத்துகளை அணிதல்

விவசாயிகள் உள்நாட்டில் உள்ள நீர் நிலைகளில் கடற்றொழிலில் ஈடுபடுவோர், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் வைத்திய ஆலோசனையுடன் நுண்ணுயிர் கொல்லிகளை உள்ளெடுத்தல்.

எலிக்காய்ச்சலானது தீவிரமான ஒரு நோயாக இருப்பினும் குணப்படுத்தக் கூடிய நோயாகும். ஆனால் தகுந்த நேரத்தில் சிகிச்சை செய்யாவிடின் உயிராபத்து ஏற்படக்கூடும் . உடனடியாக நோயை அடையாம் கண்டு சிறந்த முறையில் நுண்னுயிர் செல்களின் மூலம் சிகிச்சையளிப்பதனால் நோயினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதுடன், மரணங்களையும் தவிர்க்கலாம்.

எலிக்காய்ச்சல் நோய்க்குரிய குணங்குறிகள் காணப்படின் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனையைப் பெறுவது சிறந்தது. எலிக்காய்ச்சல் நோயினால் வட பகுதியில் இதுவரை ஏற்பட்ட இறப்புக்கள் யாவும் தாமதமாக வைத்திய ஆலோசனைக்காக வைத்தியசாலைக்கு சென்றமையினாலேயே ஏற்பட்டுள்ளன. எனவே எலிக்காய்ச்சலுக்கான குணங்குறிகள் காணப்படின் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்வது சிறந்தது.

Dr.நாகராஜா பரமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்றியது இந்தியா!

## தொடரின் நாயகனாக விராட் கோலி

**இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**



விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 47.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணியின் சார்பில் குயின்டன் டி கொக் அதிகபட்சமாக 106 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பில் பிரசித் கிருஷ்ணா மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இந்தநிலையில் 271 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 39.5 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட்டினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணியின் சார்பில் யசஷ்வி ஜெய்ஸ்வால் அதிகபட்சமாக 116 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இதற்கமைய 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இந்திய அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது.

அத்துடன் போட்டியின் நாயகனாக யசஷ்வி ஜெய்ஸ்வால் தெரிவு செய்யப்பட்டதுடன், தொடரின் நாயகனாக விராட் கோலி தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3)

# பார்முலா 1 கார் பந்தயம்; இங்கிலாந்து வீரர் சம்பியன்!



பார்முலா - 1 கார் பந்தயத்தில் லாண்டோ நோரிஸ் தனது முதல் சம்பியன்ஷிப் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.

அபுதாபியில் நடைபெற்ற விறுவிறுப்பான பார்முலா - 1 கார் பந்தயத்தில் சம்பியன்ஷிப் பட்டத்தை இங்கிலாந்து வீரர் லாண்டோ நோரிஸ் முதல் முறையாக கைப்பற்றி அசத்தியுள்ளார்.

பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் லாண்டோ நோரிஸ் மூன்றாவது இடம் பிடித்ததை அடுத்து சம்பியன்ஷிப் பட்டத்தை வெல்வதற்கான புள்ளிகளை லாண்டோ நோரிஸ் பெற்றார்.

லாண்டோ நோரிஸின் இந்த வெற்றி, அவரது மெக்லாரன் அணிக்கு இந்த சீசனை அற்புதமான ஒன்றாக மாற்றியுள்ளது.

மெக்லாரன் அணி ஏற்கனவே சிங்கப்பூரில் ஒக்டோபரில் நடைபெற்ற கான்ஸ்ட்ரக்டர்ஸ் சம்பியன்ஷிப்பை வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

26 வயதான லாண்டோ நோரிஸ், பார்முலா -1 கார் பந்தயத்தில் சம்பியன்ஷிப் பட்டம் வென்ற 11 ஆவது இங்கிலாந்து வீரர் ஆவார்.

அதே போல 2020 இற்கு பிறகு, சர்லூயிஸ் ஹாமில்டனுக்கு பிறகு பார்முலா -1 கார் பந்தயத்தில் சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றவர் பிரிட்டிஷ் வீரர் லாண்டோ நோரிஸ் ஆவார். (3)

### ஆஷஸ் 2 ஆவது டெஸ்ட் போட்டி

# அவுஸ்திரேலியா ஆதிக்கம் இங்கிலாந்து மீண்டும் தோல்வி!

அவுஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின், இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.



பிரிஸ்பேனில் நடைபெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 334 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணியின் சார்பில் ஜோ ரூட் 138 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் மிட்செல் ஸ்டார்க் 6 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனையடுத்து அவுஸ்திரேலிய அணி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக 511 ஓட்டங்களைக் குவித்தது.

அவுஸ்திரேலிய அணியின் சார்பில் 5 வீரர்கள் அரைசதம் கடந்திருந்தனர்.

இந்தநிலையில் 177 ஓட்டங்கள் பின்னடைவுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 241 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதன்படி அவுஸ்திரேலிய அணிக்கு 65 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதற்கமைய வெற்றி இலக்கை நோக்கி தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது.

இந்தநிலையில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-0 என்ற அடிப்படையில் அவுஸ்திரேலிய அணி முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வதை தவிருங்கள்

**(கொழும்பு)..........................................**

**அனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளுக்குச் செல்வது மிகவும் ஆபத்தானது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.**

பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நிவாரணப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் '117' என்ற துரித இலக்கம் மூலம் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு தெரிவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

கனமழை காரணமாக மண் ஈரப்பதத்துடன் உள்ளமையினால் விழிப்புடன் இருக்குமாறும், சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படும் போதெல்லாம் உடனடியாக குறித்த இடங்களைவிட்டு வெளியேறுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

அதேநேரம், இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த நிவாரணக் குழுக்கள் செய்து வரும் பணிகளைப் பாராட்டிய அவர், அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். (நி)

## கண்டி மாவட்டத்தில் மட்டும் நிலச்சரிவால் மண்ணுக்குள் புதையுண்ட 35 மாணவர்கள்

(கண்டி)

கண்டி மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக 35 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் நிஹால் அலஹகூன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்ட விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி மாவட்டத்தில் 97,850 பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மாத்தளை மாவட்டத்தில் 8,500 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

25 மாவட்டங்களையும் பாதித்த மோசமான வானிலை காரணமாக 627 பேர் உயிரிழந்ததாகவும், 190 பேர் காணாமல் போனதாகவும் பேரிடர் மேலாண்மை மையத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் (232) பதிவாகியுள்ளன.

நுவரெலியா (89), பதுளை (90), குருநாகல் (61), கேகாலை (32), புத்தளம் (35) மற்றும் மாத்தளை (28) ஆகிய இடங்களில் மரணங்களின் எண்ணிக்கை கவலைக்குரிய வகையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

27,663 குடும்பங்களைச் சேர்ந்த 89,857 பேர் பாதுகாப்பான மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த பேரிடர் காரணமாக 4,517 வீடுகள் முழுமையாகவும் 76,066 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. (நி)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 2026 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றமானது 2026 ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

**தொகுதிகள்**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)

தொகுதி "B" - சேவைகள் / வேலை

தொகுதி "C" - வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்

தொகுதி "D" - உணவு வகைகள்

| தொகுதி இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள் எழுது பொருட்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/ இரும்பு/ உருக்கு/ ஏனையவை) |
| A-03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம், நிழல் பிரதியாக்கும் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள் றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-04 | ஜன்னல், திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| A-05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற் வகைகள், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்கள் |
| A-07 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்பிற்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A-09 | சுத்திகரிப்பு திரவங்கள், சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள் மற்றும் ஏனையவை |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோலுற்பத்திப் பொருட்கள், கம் பூட்ஸ், சப்பாத்துக்கள் |
| A-12 | எரிபொருட்கள் , உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள், சஞ்சிகைகள் |
| A-14 | இரும்பு பொருட்கள், வேலைத்தள உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-15 | கற்கள், மணல் வகைகள், தார் |
| A-16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள், பனை மரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம் மற்றும் ஏனைய பலகைகள் |
| A-17 | அலுமினிய பிற்றிங் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| A-18 | பாதணிகள், மழைக்கவசம், கையுறை, முகக்கவசம் |
| A-19 | அலங்காரப் பொருட்கள், அலுமினியப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், பரிசுப் பொருட்கள், சில்வர் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகள் |
| A-20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A-21 | பிளாஸ்ரிக் / பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் |

| தொகுதி இல | வேலைகள் / சேவைகள் |
|---|---|
| B-01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழிநுட்ப ஆலோசனை வழங்கலும், திருத்தம் செய்தலும் |
| B-02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B-03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, நிழற்படப்பிரதி இயந்திரம், கணனி விரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் இயந்திரம்.) |
| B-04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும். |
| B-05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், ஏனையவை. |
| B-06 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரித்தலும் |
| B-07 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B-08 | கோலவுடை தைத்தல், திரைச்சீலை வழங்குதல் |
| B-09 | இறப்பர் முத்திரை வகைகள் தயாரித்து வழங்குதல் |
| B-10 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B-11 | பனர், ஸ்ரிக்கர், விளம்பரப் பலகை, லெமினேற்றிங், போட்டோபிறேம் மற்றும் தொடர்பான சேவைகள் |
| B-12 | கனரக வாகனங்கள் (JCB, Tipper, Excavator, Bulldozer etc) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளல் |
| B-13 | பிளாஸ்ரிக் / பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் திருத்தம் |
| B-14 | இரும்பு, கம்பிநெற், பிற்றிங் வகைகள், அலுமினிய பிற்றிங்குகள் தொடர்பான சேவைகள் |
| B-15 | ஒப்பந்ததாரரைப் பதிவுசெய்தல் ( கட்டட நிர்மாணமும் திருத்தமும், வீதி நிர்மாணமும் திருத்தமும், கிணறு / குழாய்கிணறு அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல்) |

| தொகுதி இல | வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C-01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை. |
| C-02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு. |
| C-03 | வாகனங்களுக்கு ரயர், ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |

| தொகுதி இல | உணவு வகைகள் |
|---|---|
| D-01 | உலர் உணவுப்பொருட்கள் மற்றும் அதனுடன் இணைந்த பொருட்கள் |
| D-02 | குளிர்பான வகைகள், குடிநீர் போத்தல்கள் |
| D-03 | சமைத்த உணவுகள், சிற்றுண்டிகள் மற்றும் கேக் வகைகள் |

**நிபந்தனைகள்**

1. வழங்கல்கள்/சேவைகள் 2026 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியாகும்.
2. விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மு.ப 8:30 தொடக்கம் பி.ப 3:00 வரை படிவக்கட்டணம் ரூ.1000.00 இனைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
3. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் போது ஒப்பந்ததாரரைப் பதிவு செய்வதற்கான பதிவுக்கட்டணம் ரூ.5,000.00 உம் ஏனையவற்றிற்கான பதிவுக்கட்டணம் ரூ.3,000.00 உம் செலுத்தப்பட வேண்டும்.
4. அனைத்து விண்ணப்பப்படிவங்களும் கடித உறையில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2026"** எனக் குறிப்பிட்டு **தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி** எனும் முகவரிக்கு 2025.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. திருப்திகரமற்ற வழங்கல்கள்/சேவைகள் நிராகரிக்கும் உரிமை சபைக்கு உண்டு.
6. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை சபைக்கு உண்டு.
7. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட வியாபார தன்மையின் அடிப்படையில் தொகுதி இலக்கங்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.** **2025.12.09**

(C-4526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியத்திற்காகவே பலர் அரச சேவையை நாடுகின்றனர்

## ஆளுநர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**அரச சேவைக்கு நியமனம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் தாம் அமரும் கதிரைக்குப் பாரமாக இல்லாமல், அந்தக் கதிரைக்குப் பெருமை சேர்க்கக் கூடிய வகையில் பணியாற்ற வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்.**



வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட 14 வருமான பரிசோதகர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு, அண்மையில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

பலர் ஓய்வூதியத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு அரச சேவையை நாடுகின்றனர். ஆனால், இது மக்களுக்குச் சேவை செய்வதற்கு இறைவனால் வழங்கப்பட்ட ஒரு பாக்கியமாகும். இச்சந்தர்ப்பத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தங்கள் சொந்தத் தேவைகளை மட்டும் நிறைவேற்றிக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். அவ்வாறானவர்களாக நீங்கள் இருக்கக் கூடாது.

உங்களிடம் சேவையை நாடி வரும் பொதுமக்கள் அனைவரும் உங்கள் உறவினர்களே. அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, நேர்மையாகவும் விரைவாகவும் அன்பாகவும் சேவை செய்ய வேண்டும்.

இன்று உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றும் தங்களது வருமானத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. அந்த வருமானத்தைத் திரட்டிக் கொடுப்பதில் வருமானப் பரிசோதகர்களான உங்களின் பங்கு அளப்பரியது.

நீங்கள் நேர்மையாகச் செயற்பட்டால்தான் சபைகளின் வருமானம் அதிகரிக்கும். உங்களின் பணியின் கனதியை உணர்ந்து நீங்கள் செயற்பட வேண்டும்.

நீங்கள் வடக்கு மாகாணத்திற்காகவே தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். எனவே, மாகாணத்தின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்றத் தயாராக இருக்க வேண்டும். உங்களுக்குத் தேவைப்படும் மேலதிக பயிற்சிகளை வழங்கி உங்களை வழிப்படுத்த மாகாண நிர்வாகம் தயாராக உள்ளது என்றார். (8)

# புங்குடுதீவு நலன்விரும்பிகளால் 4 மில்லியன் ரூபா நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பிரதேசத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 398 குடும்பங்களுக்கு புங்குடுதீவு நலன் விரும்பிகளால் நான்கு மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக அதிகளவில் பாதிக்கப்பட்ட பிரதேசமாக காணப்படுகின்ற புங்குடுதீவு பிரதேசத்தில் புங்குடுதீவைச் சொந்த இடமாக கொண்ட நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலகத்தினரின் ஒருங்கிணைப்பில் புங்குடுதீவு பிரதேசத்தில் காணப்படுகின்ற சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்படி நிதி பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 12.12.2025 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு இரும்பு பைப், கத்திகள், அலவாங்கு, வாகன பட்டரி, கோடாரி மற்றும் காஸ் சிலிண்டர் என்பனவும் 13.12.2025 ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு 37 மோட்டார் வாகனங்கள் மற்றும் 10 உழவு இயந்திர பெட்டிகள் என்பனவும் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# கலைவிழா நிகழ்வும் மாணவர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

LITTLE MASTERS' PRESCHOOL இன் கலைவிழா நிகழ்வானது இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ராஜா கறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் சமாதான நீதவான் கி.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் க.சிவகரன் மற்றும் வடமாகாண சுகாதார திணைக்கள கணக்காளர் திருமதி. சி.நிஷாந்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# உப்புக்கேணி வீதியை புனரமைத்து தாருங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி உப்புக்கேணி வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி உப்புக்கேணி வீதியானது மழை காலங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்படும் போது சேதம் அடைவதுடன் அப்பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

தற்போது வீதியில் ஏற்பட்ட வெள்ளத்தினை நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான சாவகச்சேரி கச்சாய் வீதியை வீதித்தடை ஏற்படுத்தி அவ் வெள்ளத்தினை கடற்கரைக்கு வெளியேற்றுவதற்கு சாவகச்சேரி பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனவே முதற்கட்டமாக சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான உப்புக்கேணி வீதியை புனரமைத்து தருவதற்கும் வெள்ள அனர்த்தம் ஏற்படும் போது கடலுக்குள் வெள்ள நீரை வெளியேற்றவதற்கும் எமது கிராமத்திற்கு ஓர் நீர் இறைக்கும் இயந்திரமும் நீர்க்குழாயும் தந்து உதவ வேண்டும்.

அந்த நீர் இறைக்கும் இயந்திரத்தினை பொது அமைப்புக்களிடம் வழங்கி வைத்தால் நாம் அதனைப் பாதுகாப்போம்.

அத்துடன் வெள்ள அனர்த்தங்களின் போது நாம் அதனைப் பயன்படுத்த முடியும் எனவும் மிக விரைவில் இவ் வீதியைப் புனரமைத்துத் தருமாறும் அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி | வவுனியா | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 500 | 700 | 450 | 500-800 | 350 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 250 | 190 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 700 | 500 | 600-750 | 400 | 500 |
| தக்காளி | 350 | 500 | 400 | 400 | 300-400 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 200 | 250 | 150 | 120-150 | 850 | 200 |
| கோவா | 250 | 200 | 300 | 400 | 200 | 200 | 200 |
| கரட் | 300 | 280 | 400 | 400 | 400 | 250 | 320 |
| பூசணி | 140 | 160 | 150 | 150 | 100-120 | 70 | 80 |
| புடோல் | 300 | 400 | 300 | 400 | 400 | 300 | -- |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 200 | 30-50 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-350 | 300 | 400 | 200-350 | 260 | 250 |
| பெரிய வெங்காயம் | 240 | 220 | 250 | 300 | -- | 240 | 250 |
| பாகற்காய் | 1200 | 1200 | 1600 | 1600 | 900-100 | 700 | 1500 |
| வெண்டக்காய் | 350 | 300 | 300 | 400 | 250-300 | 220 | 300 |
| கருணைக்கிழங்கு | 300 | 250 | 300 | 400 | 250 | 290 | -- |
| பயற்றங்காய் | 1200 | 1100 | 1000 | 1200 | 800-1300 | 600 | 1100 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 400 | 450 | 250 | 320 |
| பீற்றூட் | 300 | 350 | 400 | 400 | 400 | 200 | 400 |
| கறிமிளகாய் | 1200 | 900 | 1000 | 800 | 850 | 750 | 800 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 2000 | 1600 | -- | -- | -- |
| போஞ்சி | 800 | 700-900 | 1000 | 1000 | 900 | -- | 800 |
| கத்தரிதம்புள்ள | 600 | 400 | 600 | 400 | 400 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 80-160 | 200 | 200 | 150 | 150 | -- |
| தேசிக்காய் | 800 | 1000 | 400 | 400 | 300-500 | 240 | -- |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 120-180 | 80-160 | 130 | -- |
| இராசவள்ளி | 500 | 600 | 600 | 650 | 400 | 475 | -- |
| வெங்காயப்பூ | -- | 850 | 1000 | 800 | -- | -- | -- |
| முள்ளங்கி | 250 | 200 | 200 | 400 | 70 | 100 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 60 | 100 | 40 | -- |
| வல்லாரை | 80 | 80 | 100 | 80 | -- | 100 | -- |
| ஈரப்பலா | 150 | 100-150 | 100 | 120 | 80 | 60 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை உலுக்கிய "டித்வா"
## ஒரு லட்சம் அரச ஆவணங்கள் சேதம்



(கொழும்பு)

"டித்வா" புயலின் தாக்கத்தினால் நாடளாவிய ரீதியில் 100,000 இற்கும் அதிகமான அரசாங்க ஆவணங்கள் சேதமடைந்துள்ளதாக தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெனரல் நதீரா ரூபசிங்க தெரிவித்தார்.

அதன்படி, நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள், பிரதேச சபைகள், மாகாண சபைகள், திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் உள்ளிட்ட பல அரசாங்க நிறுவனங்களின் ஆவணங்கள் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பல தசாப்தங்களாக பழமையான நீதிமன்ற ஆவணங்கள், சட்ட சான்றுகள், ஓய்வூதியங்கள் மற்றும் சலுகைகளைப் பாதிக்கும் கோப்புகள், தணிக்கை மற்றும் பொறுப்புக்கூறலுக்குத் தேவையான நிதிப்பதிவுகள், நிர்வாகத்தின் வரலாற்றைப் பராமரிக்க அவசியமான பொது ஆவணங்கள் அத்துடன் நாட்டின் வரலாற்றைச் சொல்லும் வரலாற்று ஆவணங்கள் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கண்டி மாவட்டத்தில் உள்ள அரசாங்க நிறுவனங்களில் உள்ள ஆவணங்களே அதிகளவில் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பேரிடர் பாதித்த மாவட்டங்களில் உள்ள 30 தொகுதிகளில் இருந்து மாத்திரமே இதுவரையில் தகவல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் மேலும் பல பகுதிகளில் உள்ள அரசாங்க நிறுவனங்களிலிருந்து தகவல்கள் பெற எதிர்பார்க்கப்படுவதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, மீளுருவாக்கம் செய்ய முடியாத பல பொது ஆவணங்கள் நூற்றுக்கணக்கான கன மீற்றர் வெள்ள நீரினால் சேதமடைந்துள்ளதாக தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி.
மேகலை ரமேஸ்குமார்
(SLTS-I)



சேவை விபரம்

- யா/ வேலணை மத்திய கல்லூரி 01.09.1992 – 23.09.1993
- யா/மண்டைதீவு மகா வித்தியாலயம் 24.09.1993 – 31.12.1995
- கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம் 01.01.1996 – 05.09.1996
- கல்வித்திணைக்களம்–வவுனியா 06.09.1996 – 31.12.1996
- வவு/விபுலானந்தா மகாவித்தியாலயம் 01.01.1997 – 28.05.1998
- யா/வேலணை மத்திய கல்லூரி 29.05.1998 – 19.01.1999
- ஆசிரிய கலாசாலை – கோப்பாய் 20.01.1999 – 14.01.2001
- யா/வேலணை மத்திய கல்லூரி 15.01.2001 – 20.06.2006
- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம் 21.06.2006 – 17.11.2015
- யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி 18.11.2015 – இன்றுவரை

இன்றைய தினம் மணிவிழாக் காணும்
எமது கல்லூரி ஆசிரியை
திருமதி.மேகலை ரமேஸ்குமார்
அவர்களின் சேவையைப்
பாராட்டுவதோடு அவரின் ஓய்வுக் காலம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

வாழ்த்துவோர்- நலன்புரிக்கழகம்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி.

(6096)

மணிவிழா நாயகியை
வாழ்த்துகின்றோம்



Congratulations

திருமதி. சத்தியபாமா
நாகேஸ்வரன்
(பயிற்றப்பட்ட இந்து சமய ஆசிரியர்)
(உபஅதிபர் யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்)

சேவை விபரங்கள்

31.08.1987 - 01.01.1991 - தேசிய இளைஞர் சேவை மன்றம்
02.01.1991 - 31.12.1991 - மு/அணிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்
01.01.1992 - 09.01.1994 - கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை
10.01.1994 - 08.01.1995 - மு/அணிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்
09.01.1995 - 09.01.2011 - மு/துணுக்காய் அ.த.க பாடசாலை
10.01.2011 - 09.12.2025 - யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்

நானிலம் போற்றிட நாகேஸ்வரனின் கரம்பற்றி ஈசன் பணிதனை சிரமேற்று
கல்விப் பணிதனில் களம்பலகண்ட சத்தியபாமாவே–நின்
முப்பத்து நான்காண்டு ஆசிரியப் பணிதனில் கால்பதித்து
மணிவிழாக்காணும் இந்நன்நாளிலே–ஈரேழு ஆண்டுகள்
எம்பதிதனிலே உப அதிபராக, நல்லாசானாக ஏன் நல்லதொரு அன்னையாக

நீராற்றிய அரும்பெரும் சேவைதனை நினைத்து நாம் வாழ்த்துகின்றோம்
வயது உமக்கு ஓய்வு தந்தாலும் தொடரட்டும் ஈசன்பணி
நீடிய ஆயுளுடன் சீரும் சிறப்பும் பெற்று
நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்
வாழ்க வாழ்க வாழியவே –வாழ்க வாழ்க வாழியவே

(6088)

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சூடானில் ஆயுத குழுக்களின் தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் 50 பேர் உயிரிழப்பு



(சூடான்)
சூடானில் பாடசாலை, மருத்துவமனை மீது ஆயுதக் குழுவினர் ட்ரோனை ஏவி தாக்குதல் நடத்தியதில் 33 குழந்தைகள் உள்ளிட்ட 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

சூடானில் அந்நாட்டு இராணுவத்திற்கும் ரேபிட் சப்போர்ட் போர்சஸ் (ஆர்எஸ்எப்) எனப்படும் ஆயுதமேந்திய குழுவினருக்கும் சமீப காலமாக மோதல் நிலவுகிறது.

இந்நிலையில் கோர்டோபான் மாகாணத்தில் உள்ள கலோகி நகரில் உள்ள ஒரு சிறுவர்கள் பாடசாலை, மருத்துவ மனை மீது ஆயுத குழுவான ஆர்எஸ்எப், நேற்று முன்தினம் இரவு ட்ரோன் ஏவியது.

இந்தத் தாக்குதலில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

ஆயுதக் குழுவினர், முதலில் பாடசாலையை தாக்கியதுடன் பின்னர் பொதுமக்கள் உணவுக்காக உதவி வாங்கக் கூடியிருந்த இடத்தில் இரண்டாவது தாக்குதலை நடத்தியதாகவும், இதில் 50 பேர் கொல்லப்பட்டனர் எனவும் குழந்தைகள் 33 பேர் உள்ளடங்குவதாகவும். இந்த தாக்குதலுக்கு குறித்த அமைப்பினர் பொறுப்பேற்கவில்லை எனவும் சூடான் மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)



## 2 வருடங்களின் பின்னர் பெத்லஹேமில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



(ஜெருசலேம்)
காசா போரின் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் பாலஸ்தீனத்திலுள்ள பெத்லஹேம் நகரில் இந்த ஆண்டு மீண்டும் தொடங்கியுள்ளன.

இயேசு கிறிஸ்து பிறந்த இடமாகக் கருதப்படும் இந்த் தொன்மையான நகரில், ஒரு குகைக்கு மேலே அமைந்துள்ள தேவாலயம், கிறிஸ்தவர்களின் மிகவும் புனிதமான மற்றும் பழைமையான வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.

காசா பகுதியில் தற்போது தற்காலிகப் போர் நிறுத்தம் நிலவுவதால், பெத்லஹேமில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் உற்சாகமாக மீண்டும் நடைபெறத் தொடங்கியுள்ளன.

தேவாலயத்துக்கு அருகே குடில் சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான கிறிஸ்மஸ் மரம், பல வண்ண விளக்குகளால் ஜொலித்தது. அங்கு, ஆயுதம் ஏந்திய பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், பொதுமக்கள் பலர் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். (நி)



## ரஷ்யாவால் தகர்க்கப்

# வெளிவரும்

## சர்வதேச முகமை



ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் உக்கிரமாக நடந்துவரும் பின்னணியில் சேதமடைந்த செர்னோபில் அணு உலையின் கதிர் வீச்சு வெளியேறுவதை தடுக்கும் பாதுகாப்பு கவசம் தற்போது சேதமாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், கவச அமைப்பின் கூரையின் தற்காலிக சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் எனினும் கதிர்வீச்சு பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்க, முழுமையான மறுசீரமைப்பு பணி அவசியம் என்று சர்வதேச அணு சக்தி முகமை அமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி அணு உலையின் பாதுகாப்புக் கவசம் சேதம் அடைந்துள்ளமைக்கு ரஷ்யா நடத்திய தாக்குதலே காரணம் என்று உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

உக்ரைன் நாட்டில் அமைந்துள்ள செர்னோபில் அணு உலையில் 1986 ஆம் ஆண்டு வெடிவிபத்து ஏற்பட்டது. கதிர்வீச்சு வெளியாகி ஏராளமானோர் உயிரிழந்தனர்.

அந்த பகுதியே மனிதர்கள் வாழத் தகுதியற்ற இடமாக மாறியுள்ளது.

இரும்புத்திரை நாடாக இருந்த சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக உக்ரைன் இருந்தபோது இந்தச் சம்பவம் பதிவாகியது.

இதனால், அணு உலை வெடி விபத்து பற்றிய முழுமையான விபரங்கள் உடனடியாக



## பிரித்தானியா உள்ளிட்ட தனது செல்வாக்கை விரிவுபடு

## உளவுத்துறை தகவல்

(லண்டன்)
பிரித்தானியா, ஜேர்மனி, நெதர்லாந்து, ஆஸ்திரியா, இத்தாலி, பெல்ஜியம் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் ஹமாஸ் அமைப்பினர் தமது செல்வாக்கை பரப்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விரிவாக்க நடவடிக்கைகளுக்கு ஐஆர்ஜிசி எனப்படும் ஈரானின் நிழல் இஸ்லாமிய புரட்சிகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ப்பட்ட அணு பாதுகாப்பு கவசம்

# கதிர்வீச்சுக்கள்!

## மையின் அபாய அறிவிப்பு

(வியன்னா)

**உக்ரைன் நாட்டில் 1986ஆம் ஆண்டு இடம்பெற்ற வெடி விபத்தால் சேதமடைந்த செர்னோபில் அணு உலையில் இருந்து தற்போது கதிர்வீச்சுக்கள் வெளிவர ஆரம்பித்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகமை அமைப்பு தெரிவித்துள்ளது.**



வளியாகவில்லை. சோவியத் யூனியன் ரிந்து, ரஷ்யாவும், உக்ரைனும் னித்தனி நாடுகள் ஆன நிலையில் ன் முழுமையான பாதிப்புகள் நரியவந்தன.

இதையடுத்து, சர்வதேச நாடுகளின் யற்சியில், சேதமுற்ற அணு லையில் இருந்து கதிர்வீச்சு வெளி பறுவதைத் தடுக்கும் முயற்சிகள் நாடங்கின.

சர்வதேச நாடுகள், தன்னார்வ மைப்புகள் என 45 நன் காடையாளர்கள் மூலம் திரட்டப்பட்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியில், அணு உலையை சுற்றிலும் கவச அமைப்பு நிறுவப்பட்டது.

இதன்படி வேறு ஒரு இடத்தில் கவச அமைப்பை நிறுவி, அதை நகர்த்திச் சென்று அணு உலையை மூடி, கதிர்வீச்சு வெளியில் வராமல் செய்தனர்.

இது, உலகின் மிகப் பெரிய நகரும் கட்டுமானம் என்று வர்ணிக்கப்பட்ட கவச அமைப்பாகும்.

100 ஆண்டுகளுக்கு செயற்பாட்டில் இருக்கும் வகையில், இந்த அதி நவீன தொழில்நுட்ப கவச அமைப்பு நிறுவப்பட்டது.

இதற்கான பணிகள், 2010 முதல் 2019ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம், வெடித்துச் சிதறிய அணு உலையில் இருந்து தொடர்ந்து கதிர்வீச்சு வெளியேறுவது தடுத்து நிறுத்தப்பட்டது. (நி)

## ரஷ்ய ஜனாதிபதியைத் தொடர்ந்து இந்தியா வரும் உக்ரைன் ஜனாதிபதி



(டில்லி)

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வருகிற ஜனவரி மாத தொடக்கத்தில் இந்தியா வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பயணத் திகதியை உறுதிசெய்ய இந்தியா, உக்ரைன் வெளியுறவுத் துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் கடந்த 4 ஆம் திகதி 2 நாள் பயணமாக இந்தியா வந்தார். அவர் பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்றும் இந்தியா அமைதியின் பக்கம் நிற்கிறது என்றும் புடினிடம் மோடி வலியுறுத்தினார்.

அதேபோல் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இந்தியாவின் பங்களிப்பை புடின் பாராட்டினார்.

இந்த நிலையில் புடின் வருகையைத் தொடர்ந்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வருகிற ஜனவரி மாதத் தொடக்கத்தில் இந்தியா வர உள்ளதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

உக்ரைன் மீதான போருக்கு பிறகு ரஷ்ய ஜனாதிபதி புடினின் இந்திய பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

தற்போது உக்ரைன் ஜனாதிபதி இந்தியாவுக்கு வர உள்ளார். இது ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வருவதில் இந்தியாவின் முயற்சிக்கு பலம் சேர்ப்பதாக அமையும் என்று கருதப்படுகிறது. (நி)



## ட நாடுகளில் டுத்தும் ஹமாஸ்

காவல்படை மற்றும் லெபனான் பினாமி படைகளான ஹெஸ்பொல்லா ஆகியவை ஹமாஸ்'க்கு உதவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உளவுத்துறை அறிக்கை ஒன்றை கோடிட்டு பிரித்தானியா ஊடகம் ஒன்று இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிய இராஜதந்திர பணிகள், இஸ்ரேலிய தொடர்புகளைக் கொண்ட வணிகங்கள் அல்லது போரால் பாதிக்கப்பட்ட யூத அரசுடன் தொடர்புடைய மத தளங்களை குறிவைத்து இந்த விரிவாக்கப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகள் உள்ளிட்ட ஆயுதங்களை மறைத்து வைப்பதுடன், இந்தக் குழு ட்ரோன் போர் முறையிலும் தீவிரமாக விரிவடையத் தொடங்கியுள்ளது.

இந்தக் குழு லெபனான் மற்றும் ஈரானில் இருந்து ஆதரவைப் பெறுவதாகவும், கிழக்கு ஐரோப்பிய குற்ற வலையமைப்புகளுடன் நெருங்கிய தொடர்புகளை வளர்த்துக் கொண்டு, கொடிய ஆயுதங்களை வாங்க உதவுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் அதன் சொந்த தளமான காசாவில் அழிக்கப்பட்டிருந்தாலும், 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் ஏழாம் திகதி முன்னெடுக்கப்பட்ட தெற்கு இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு நீண்ட காலத்திற்கு முன்பே ஐரோப்பிய விரிவாக்கத்தைத் திட்டமிட்டிருந்ததாக கூறப்படுகின்றது.

ஹமாஸ் பல "ஆண்டுகளாக" ஐரோப்பா முழுவதும் முக்கியமாக இஸ்ரேலிய இலக்குகளுக்கு எதிராகத் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், ஐரோப்பிய மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள், ஹமாஸ் இயக்கும் சர்வதேச பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல் எதிர்வரும் காலங்களில் அதிகமாகவே இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள்

## எதிலும் நிதானமாக செயற்படும் தனுசு இராசியினரே!



**கிரகநிலை -** தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி, ராகு - சுக ஸ்தானத்தில் சந்திரன் - அஷ்டம ஸ்தானத்தில் குரு (வ) - பாக்கிய ஸ்தானத்தில் கேது - லாப ஸ்தானத்தில் புதன் - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** எதிலும் நிதானமாக செயற்படுவதுடன் அடுத்தவரின் ஆலோசனையையும் கேட்கும் தனுசு இராசியினரே! இந்த மாதம் எதிர்பார்த்த காரியம் வெற்றிகரமாக நடந்து முடியும். பணவரத்து இருக்கும். எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். மனச்சஞ்சலம் ஏற்படும். வீண் பகைகள் ஏற்பட்டு விலகும். எவ்வளவு திறமையாகச் செயற்பட்டாலும் பாராட்டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும். திடீர் கோபம் ஏற்படும். வீண் செலவும் இருக்கும். பிடிவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும்.

தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் மெத்தன போக்கு காணப்படும். வாடிக்கையாளர்களிடம் கோபமான வார்த்தைகளைப் பேசாமல் சாந்தமாக உரையாடுவது வியாபார விருத்திக்கு வழி செய்யும். பணவரத்து திருப்தியாக இருக்கும். செலவும் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். சக ஊழியர்களுடன் கடுமையாகப் பேசாமல் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்கள் கோபத்தைத் தூண்டலாம். மிகவும் கவனமாகப் பேசுவதும் வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நன்மை தரும். கணவன், மனைவிக்குள் திடீர் மன வருத்தம் ஏற்பட்டு நீங்கும். அயலவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

**பெண்கள் -** மற்றவர்களின் செயல்களால் திடீர் கோபம் உண்டாகலாம். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீண் செலவைக் குறைப்பது நல்லது.

**கலைத்துறையினர் -** எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. எளிதில் முடிய வேண்டிய காரியம் கூட தாமதமாகலாம். எந்த விடயத்திலும் ஒரு முறைக்கு இருமுறை சிந்தித்து செயற்படுவது நல்லது.

**அரசியல் துறையினர் -** மனதில் தைரியம் உண்டாகும். எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் ஏற்படும். எதிலும் முன்னேற்றம் காணப்படும். இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும்.

**மாணவர்கள் -** கல்வியில் காணப்பட்ட மெத்தன போக்கு நீங்கி சுறுசுறுப்பாக பாடங்களை படிப்பீர்கள். பிடிவாதத்தை விடுவது நன்மை தரும்.




**மூலம்:** இந்த மாதம் பொதுக் காரியத்தில் உள்ளவர்கள் சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் பெறுவார்கள். குடும்பத்தில் இருந்து வந்த சண்டை நீங்கி தம்பதியர் ஒன்று சேர்வார்கள்.

ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நினைத்தபடி பண வரவுகளைப் பெறலாம். தொழிலதிபர்கள் அதிக உற்பத்தியையும், இலாபத்தையும் பெறுவார்கள்.

**பூராடம்:** இந்த மாதம் பொறுமையுடன் செயற்பட வேண்டும். வியாபாரிகள் மறைமுகப் போட்டிகளால் நெருக்கடிகளைச் சந்திக்கலாம். கவனமாகச் செயற்பட்டால் இலாபம் பெறலாம். இதுவரை குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்த பிள்ளைகள் வந்து சேர்வார்கள். அயல்நாட்டில் இருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். தந்தை, மகன் உறவு சுமுகமாகும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் ஊழியர்கள் நினைத்த இடத்திற்கு மாறுதல் பெறுவார்கள். தங்க நகை வியாபாரிகள் நல்ல லாபத்தைப் பெறுவார்கள். அதேநேரம் பணியாளர்களிடம் கவனமாக இருக்க வேண்டும். வியாபாரிகள் நல்ல நிலையை அடைவார்கள். வேலை தேடும் இளைஞர்களுக்கு எதிர்பார்த்தபடி வேலை வாய்ப்புகள் வந்து சேரும்.

**பரிகாரம்:** குருவுக்கு வியாழக் கிழமையில் நெய் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். அறிவுத் திறன் கூடும்.

**சந்திராஷ்டம தினங்கள்:**
8, 9

**அதிஷ்ட தினங்கள்:**
2, 3, 29, 30

## சொல்லாற்றல் கொண்ட மகர இராசியினரே!



**கிரகநிலை -** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி, ராகு - தைரிய வீரிய ஸ்தானத்தில் சந்திரன் - களத்திர ஸ்தானத்தில் குரு (வ) - அஷ்டம ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் புதன் - லாப ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** சொல்லாற்றலும் செயலாற்றலும் பெற்ற மகர இராசியினரே! இந்த மாதம் பணவரத்து இருக்கும். தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வீண் மனக் குழப்பங்கள் தோன்றினாலும் முடிவில் தெளிவு உண்டாகும். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. சொன்ன சொல்லைக் காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். தேவையான உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். வீண் கனவுகள் தோன்றும். திடீர் கோபம் தோன்றலாம். மிகவும் கவனமாக பேசுவது நன்மை தரும்.

தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில் முன்னேற்றம் தொடர்பான கவலை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒரு சின்ன விடயத்திற்காகக் கூட அலைய வேண்டி இருக்கும். பணிச்சுமை காரணமாக திடீர் கோபம் உண்டாகலாம்.

கவனமாகச் செயற்படுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கிடைக்கலாம். குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு சரியாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்குள் கருத்து வேற்றுமை ஏற்படலாம். உங்கள் செயல்களைக் குடும்பத்தில் உள்ளவர்கள் குற்றம் சொல்லலாம்.

எனவே வாக்குவாதத்தில் ஈடுபடாமல் கண்டும் காணாமலும் செல்வது நன்மை தரும். பிள்ளைகளின் எதிர்கால நலனில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**பெண்கள் -** கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபடுவீர்கள். மற்றவர்கள் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. கோபத்தை தவிர்ப்பது நன்மை தரும்.

**கலைத்துறையினர் -** வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும்.

**அரசியல்துறையினர் -** காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். திட்டமிட்டு செய்வதன்மூலம் சாதகமான பலன் கிடைக்கும்.




சக மனிதர்களை அனுசரித்து செல்வது நல்லது. எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம்.

**மாணவர்கள் -** நிதானத்தைக் கடைபிடிப்பது வெற்றிக்கு உதவும். பாடங்களைக் கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்லது.

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் திருமணத்திற்கு வரன் தேடுவோர் வரக்கூடிய வரன்களை நன்றாக ஆராய்ந்து முடிவுக்கு வர வேண்டும். தொழிலதிபர்கள் வெளிநாட்டு ஒப்பந்தங்களைப் பெறுவார்கள். இலாபம் பெருகும். வியாபாரிகள் போட்டியின்றி வியாபாரம் செய்து இலாபத்தைப் பெறுவார்கள்.

**திருவோணம்:** இந்த மாதம் பிரிந்து சென்ற தம்பதியினர் ஒன்று சேர்வார்கள். நிதானத்தைக் கடைப் பிடிக்க வேண்டிய நாள். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வருவாய் உண்டு. மருத்துவத் தொழில் புரி வோருக்கு அதிக வருவாய் வரும் நாள். சோதனைகள் வெற்றியாக மாறும்.

**அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் காரியங்கள் அனைத்தும் கைகூடும். உங்கள் செயற்பாடுகள் மற்றவர்களைக் கவரும். உல்லாசப் பயணங்களில் நாட்டம் செல்லும். மன அடக்கம் பெற தியானம் செய்யுங்கள். படிப்பில் நாட்டம் கூடும். பெற்றோர்கள், பிள்ளைகள் விரும்பியதை வாங்கிக் கொடுப்பார்கள். செலவுகளும், அலைச்சலும் கூடும்.

**பரிகாரம்:** சனிக்கிழமையில் சனி பகவான், விநாயகரை வழிபடுவது எல்லாக் காரியங்களும் நன்றாக நடக்க உதவும். கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் அமைதி உண்டாகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:**
10, 11, 12

**அதிஷ்ட தினங்கள்:**
4, 5, 31

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 10)

## வீட்டு கட்டிடங்களில் இரும்புக் கம்பிகளின் பயன்பாடு - முக்கியத்துவம், தரநிலைகள் மற்றும் சரியான நடைமுறைகள்




இரும்புக் கம்பிகள் அல்லது ரீன்போர்ஸ்மெண்ட் பார்கள் (Reinforcement Bars) என்பது கொங்கிரீட் (Concrete) கட்டிடங்களின் முதுகெலும்பாக செயற்படுகின்றன. வீட்டு கட்டுமானங்களில் கம்பிகளின் சரியான தேர்வு, அமைப்பு மற்றும் வேலைத்திறன் (workmanship) மிகவும் முக்கியமானவை. இவை சரியாகப் பின்பற்றப்படாத போது, பிளவுகள், நீர் ஊடுருவல், கம்பி துருப்பிடித்தல், மற்றும் கட்டமைப்பு கோளாறுகள் போன்ற பல பிரச்சினைகள் உருவாகின்றன. இந்த கட்டுரை வீட்டு கட்டிடங்களில் இரும்புக் கம்பிகளின் முக்கியத்துவம், தரநிலைகள், பொறியியலாளர்களின் பங்கு மற்றும் தவறான நடைமுறைகளால் ஏற்படும் விளைவுகளை விளக்குகிறது.

1.இரும்புக் கம்பிகளின் கட்டமைப்பு முக்கியத்துவம்

கொங்கிரீட் அழுத்தத்தை (Compression) தாங்கும் திறன் கொண்டது. ஆனால் இழுவை (Tension) தாங்க இயலாது. இந்த இழுவை வலுவை வழங்குவதற்காக இரும்புக் கம்பிகள் பயன்படுத்தப்படுகின்றன. ரீன்போர்ஸ்மெண்ட் கம்பிகள் கட்டிடத்தின் "நரம்பு" போல செயற்பட்டு:

● வீம் (Beam) ,சிலப் (Slab), கொலம் (Column) போன்ற உறுப்புகளின் சுமைத் தாங்கும் திறனை உயர்த்துகின்றன

●வளைவு மற்றும் திரிப்பு (shear) காரணமான பிளவுகளைத் தவிர்க்கின்றன

●நீண்டகால சேவை ஆயுளை மேம்படுத்துகின்றன

●நிலநடுக்கம், காற்றழுத்தம் போன்ற வெளிப்புற விசைகளை சமநிலையில் தாங்குகின்றன

கம்பிகளின் தரம் அல்லது அமைப்பில் செய்யப்படும் எந்த தவறும் நேரடியாகக் கட்டிடத்தின் பாதுகாப்பை பாதிக்கிறது.

2.இரும்புக் கம்பிகளுக்கான தர நிலைகள் (SLS 375 போன்றவை)

எந்த கட்டுமானத்திலும் முதலில் கவனிக்க வேண்டியது பயன்படுத்தப்படும் இரும்புக் கம்பிகளின் தரம் மற்றும் விட்டம். இலங்கையில் SLS 375 போன்ற தர நிலைகள் கம்பிகளின் வேதியியல் அமைப்பு, இழுவை வலு, நீட்சித் திறன், ரிப் (ribs) வடிவம் போன்றவற்றை வரையறுக்கின்றன.

சரியான தரநிலைகளை பின்பற்றுவதன் முக்கிய அம்சங்கள்:

●சரியான grade மற்றும் diameter தேர்வு

● தேவையான yield strength உடைய கம்பிகள்

●ரிப் வடிவமைப்பு சரியாக இருத்தல்

● துருப்பிடிக்காத, தரமான கம்பி (steel) பயன்படுத்துதல்

சில நேரங்களில் குறைந்த விலையில் தரமற்ற கம்பிகளை வாங்குவதால் எதிர்காலத்தில் பெரிய பிரச்சினைகள் உருவாகின்றன. எனவே SLS தரநிலையை பூர்த்தி செய்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

3.வடிவமைப்பு மற்றும் பொறியியலாளர்களின் தொழில்நுட்ப பங்கு

கம்பிகளை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது அனுபவம் அல்லது கணிப்புகள் மூலம் முடிவு செய்யக்கூடிய விடயம் அல்ல. ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஒரு தகுதி வாய்ந்த structural engineer தான்:

•எத்தனை கம்பிகள் தேவை

•எந்த விட்டத்தில் தேவை

•எத்தனை இடைவெளியில் அமைக்க வேண்டும்

•எந்த உயரத்தில் அமைக்க வேண்டும்

•anchorage , lap length போன்ற தேவைகள்

•concrete cover அளவு

ஆகியவற்றை கணக்கீடு செய்து தீர்மானிக்க முடியும்.

ஆனால் நடைமுறையில், வீட்டு கட்டுமானங்களில் இந்த வடிவமைப்புகள் பின்பற்றப்படாமல், மேசன் (mason) அனுபவத்தைக் கொண்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மேசன்கள் திறமையுடையவர்களாக இருந்தாலும், structural design principles (bending moment, shear force, deflection, factor of safety) போன்றவற்றை தொழில்நுட்பமாக புரிந்திருக்க மாட்டார்கள். இதனால் reinforcement தொடர்பான தவறுகள் அதிகம் ஏற்படுகின்றன.

4.இரும்புக் கம்பிகளை அமைக்கும் போது காணப்படும் பொதுவான பிழைகள்

சரியான கம்பி பயன்படுத்தப்பட்டாலும், பின்வரும் வேலைத்திறன் குறைபாடுகள் கட்டிடத்தை பாதிக்கும்:

4.1 தவறான கம்பி அமைப்பு

கம்பிகள் தேவையான இடத்தில் இல்லை, அதிக உயரத்தில் அல்லது குறைவான உயரத்தில் இருக்கலாம்.

4.2 **Concrete cover** குறைவாக இருப்பது

Cover குறைவாக இருந்தால் நீர் ஊடுருவல் மூலம் கம்பி விரைவாக துருப்பிடிக்கும்.

4.3 தவறான **Lapping** மற்றும் **Anchorage**

Lap length குறைவாக இருந்தால் கம்பிகளுக்கு இடையே stress transfer சரியாக நடைபெறாது.

4.4 **Loose tying** (தளர்வான கட்டுதல்)

கம்பிகள் concreting போது நகர்ந்து structural strength பாதிக்கப்படும்.

4.5 துருப்பிடித்த கம்பி அல்லது தரமற்ற கம்பி (**steel**)

Bonding குறைந்து structural failure ஏற்படலாம்.

5. தவறான கம்பி (**Reinforcement**) நடைமுறைகளால் ஏற்படும் விளைவுகள்

சரியான நடைமுறைகள் பின்பற்றப்படாததால்:

5.1 பிளவுகள் உருவாகும்

பீம், சிலப், சுவர் போன்ற பகுதிகளில் பிளவுகள் ஏற்படும்.

5.2 நீர் சிதறல் மற்றும் கசிவு(**Leakage**)

பிளவுகள் மற்றும் குறைவான cover காரணமாக நீர் உட்புகும்.

5.3 கம்பி துருப்பிடித்தல்

Cover குறைவாக இருந்தால் கம்பி துருப்பிடிக்கும், concrete உடைந்து போகும்.

5.4 **Structural load capacity** குறைவு

சரியான reinforcement இல்லாமல் கட்டிடத்தின் பாதுகாப்பு குறையும்.

5.5 அதிகமான திருத்த செலவுகள்

Crack repair, waterproofing போன்ற பணிகளுக்காக கூடுதல் செலவு ஏற்படும்.

5.6 தோற்றம் மற்றும் மதிப்பு குறைவு

வீட்டின் பெறுமதி (resale value) குறையும்.

சில சூழலில் கட்டிடம் பயன்படுத்த முடியாத நிலைக்குச் செல்வதும் கூட.

6.தொழில்நுட்ப மேற்பார்வையின் அவசியம்

Reinforcement வேலைகளை சரியாகச் செய்வதற்கு:

•பொறியியலாளர்கள் வரைபடத்திற்கு (drawings) ஏற்ப அமைத்தல்

•கம்பி வகை, விட்டம் சரிபார்த்தல்

•spacing, covers, laps சரிபார்த்தல்

•கம்பிகள் தூய்மையாக இருப்பதை உறுதி செய்தல்

•Concreting க்கு முன் inspection செய்வது

மிக முக்கியம். சிறிய வீட்டு கட்டுமானங்களுக்கும் கூட பொறியியலாளர் மேற்பார்வை அவசியம்.

7. வீட்டை கட்டும் வாடிக்கையாளர்களுக்கான பரிந்துரைகள்

•தகுதியான structural engineer மூலம் design பெறுதல்

•SLS 375 உடன் இணக்கமான steel பயன்படுத்துதல்

•Site supervision அவசியம்

•Non-professional ஆலோசனைகளைத் தவிர்த்தல்

•Reinforcement inspection செய்யாமல் concreting செய்யாதல்

•Materials மற்றும் drawings பதிவுகளை வைத்திருத்தல்

இவை நீண்டகால பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதி செய்யும்.

8. முடிவு

கம்பிகள் (**Reinforcement**) வீட்டு கட்டிடங்களில் கட்டமைப்பின் "நரம்பு" போன்றவை. சரியான தரத்திலும், சரியான இடத்திலும், பொறியியலாளர் வடிவமைப்பிற்கு ஏற்ப அமைக்கப் படாவிட்டால் பிளவுகள், நீர் லீக்கேஜ், structural failure போன்ற பெரும் பிரச்சினைகள் உருவாகின்றன. SLS தரநிலைகள், தொழில்நுட்ப மேற்பார்வை மற்றும் நிபுணத்துவம் பின்பற்றப்படும்போது கட்டிடம் பாதுகாப்பாகவும் நீண்டகாலம் நீடித்துவமாகவும் இருக்கும். எனவே reinforcement தொடர்பான எந்தப் பணியும் பொறியியலாளர் அறிவுறுத்தலுக்கு உட்பட்டே செய்யப்பட வேண்டும்.

**இலங்கை பொறியியலாளர்கள் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

09.12.2025
கார்த்திகை 23, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி முன்னிரவு 8.49 மணி வரை

பூரம் முற்பகல் 8.59 மணிவரை
சுப நேரம் 10.48-12.18மணிவரை
இராகுகாலம் 3.18-4.48 மணிவரை

சந்திராஷ்டமம்- பூராடம்.

**வளவன்**




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசைகாட்டுவீர்கள்.




தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பயணங்களால் பலனுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்,




வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், மன திற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அரசு வழியில் அனுகூலமுண்டு, காரிய அனுகூலமுண்டு.




தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம்.




எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**முயற்சியைக் கைவிடாதே வெற்றி இன்னும் சிறிது தூரம் தான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியியல் நடபடிமுறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின்
பிரிவு 63 இன் கீழான விண்ணப்பம்

கிருஷ்ணவேணி சிறீதரன் nee
கிருஷ்ணானந்த மனோகரபூபன்
இல.49, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,யாழ்ப்பாணம்

**வழக்காளி**

**வழக்கு இல:-77/TR/2025** **எதிர்**

1. மருதலிங்கம் பிரதீபன்
"திருப்பதி", தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி
2. கனகராஜா ஸ்ரீமோகனன்
இல.36, சிவன் அம்மன் கோவில்
வீதி, திருநெல்வேலி,
3. சாம்பசிவம் சுதர்சனன்
இல.68, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்
4. செல்லத்துரை கிருபாகரன்
"சாய் பவனம்", குரும்பைக்கட்டி,
புலோலி தென்மேற்கு,
புலோலி
5. தர்சினி உருத்திரகோடீஸ்வரன்
பிள்ளையார் கோவிலடி,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை
6. செல்லையா ரமேஸ்குமார்
பாரதி வீதி, கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு, உடுப்பிட்டி
7. கதிர்காமர் திருக்குமார்
இல.28/12 C, மணல்தரை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
8. இலங்கநாதன் சுரேந்திரநாதன்
இல.4, கிங்ஸ் அவென்யூ,
உரும்பிராய்
9. ஆறுமுகம் சத்தியமூர்த்தி
"அம்பிகை வாசா", உடுவில்
கிழக்கு, சுன்னாகம்
10. குணாஜினி சதீஸ்குமார்
இல.100, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்

**எதிராளிகள்**

மேற்குறித்த வழக்கானது மேலே பெயர் குறிக்கப்பட்ட வழக்காளியினால் மேலே பெயர் குறிக்கப்பட்ட எதிராளிகளுக்கு எதிராக பின்வரும் நிவாரணங்களை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(அ) குடியியல் சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் பத்திரிகையில் அறிவித்தல் வழங்கும் கட்டளையும்;

(ஆ) நம்பிக்கை பொறுப்பு உறுதி இல: 1622 (X1) குறித்துரைக்கும் நோக்கங்களுக்கு (Objectives) அமைய எதிராளிகள் செயற்பட வேண்டும் என்ற கட்டளையும், தீர்ப்பும்;

(இ) இடைக்காலத் தடைக்கட்டளைக்கான விண்ணப்பம் விசாரணை செய்யப்பட்டு, கட்டளையாக்கப்படும் வரையில் எதிராளிகள் அல்லது அவர்களது ஊழியர்கள், முகவர்கள் அல்லது வேறு நபர்களை பின்வருவனவற்றில் ஈடுபடுவதில் இருந்து தடுக்கும் ஒரு கட்டாணை -

(i) பிராதின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தில் அமைந்துள்ள மரங்கள் மற்றும்/ அல்லது பயன்தரு மரங்கள் மற்றும்/அல்லது நிழல் தரு மரங்களை வெட்டுவதில் இருந்தும் தறிப்பதிலிருந்தும்;

(ii) பிராதின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தில் புதிய மற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதிலிருந்தும்;

(iii) உள்ளக விளையாட்டரங்கம் ஒன்றினை மற்றும்/ அல்லது விளையாட்டரங்கம் ஒன்றினை அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்தும்;

(iv) "யாழ்ப்பாணம் பழைய பூங்கா அறக்கொடை நிதியத்தின்" நிர்வாகம், முகாமை என்பவற்றினை நம்பிக்கைப் பொறுப்பு உறுதி இல: 1622 (X1) இற்கு முரணாக நடாத்துவதிலிருந்தும்;

(ஈ) வழக்கு விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்படும் வரையில் எதிராளிகள் அல்லது அவர்களது ஊழியர்கள், முகவர்கள் அல்லது வேறு நபர்களை பின்வருவனவற்றில் ஈடுபடுவதில் இருந்து தடுக்கும் ஓர் இடைக்காலத் தடைக்கட்டளை-

(i) பிராதின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தில் அமைந்துள்ள மரங்கள் மற்றும்/அல்லது பயன்தரு மரங்கள் மற்றும்/அல்லது நிழல் தரு மரங்களை வெட்டுவதில் இருந்தும் தறிப்பதிலிருந்தும்;

(ii) பிராதின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தில் புதிய மற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதிலிருந்தும்;

(iii) உள்ளக விளையாட்டரங்கம் ஒன்றினை மற்றும்/அல்லது விளையாட்டரங்கம் ஒன்றினை அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்தும்;

(iv) "யாழ்ப்பாணம் பழைய பூங்கா அறக்கொடை நிதியத்தின்" நிர்வாகம், முகாமை என்பவற்றினை நம்பிக்கைப் பொறுப்பு உறுதி இல: 1622 (X1) இற்கு முரணாக நடாத்துவதிலிருந்தும்;

(உ) எதிராளிகள் அல்லது அவர்களது ஊழியர்கள், முகவர்கள் அல்லது வேறு நபர்களை பின்வருவனவற்றில் ஈடுபடுவதில் இருந்து தடுக்கும் ஓர் நிரந்தரத் தடைக்கட்டளை-

(i) பிராதின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தில் அமைந்துள்ள மரங்கள் மற்றும்/ அல்லது பயன்தரு மரங்கள் மற்றும்/அல்லது நிழல் தரு மரங்களை வெட்டுவதில் இருந்தும் தறிப்பதிலிருந்தும்;

(ii) பிராதின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தில் புதிய மற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதிலிருந்தும்;

(iii) உள்ளக விளையாட்டரங்கம் ஒன்றினை மற்றும்/ அல்லது விளையாட்டரங்கம் ஒன்றினை அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்தும்;

(iv) "யாழ்ப்பாணம் பழைய பூங்கா அறக்கொடை நிதியத்தின்" நிர்வாகம், முகாமை என்பவற்றினை நம்பிக்கைப் பொறுப்பு உறுதி இல: 1622 (X1) இற்கு முரணாக நடாத்துவதிலிருந்தும்;

(ஊ) செலவுகள் மற்றும் :

(எ) இந்தவிடயம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கக்கூடிய வேறு ஏதேனும் நிவாரணங்கள்.

மேலும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் 05/12/2025 ம் திகதிய கட்டளை மூலம் பிராதின் வேண்டுதல் பகுதியில் கோரப்பட்டதற்கமைவாக குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் இந்த வழக்கு தொடர்பிலான அறிவித்தலை பிரசுரிக்குமாறு பணித்து கட்டளையாக்கியுள்ளது.

ஆதலால், மேற்குறித்த வழக்காளி மேற்குறித்த எதிராளிகளுக்கு எதிராக வழக்குச் செலவு உட்பட மேற்குறிப்பிட்ட நிவாரணங்களை கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்று அறியத்தரப்படுகின்றது.

இவ் வழக்கு 2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி திறந்த நீதிமன்றில் அழைக்கப்படும்.

**ஆதன அட்டவணை**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு, யாழ்ப்பாணம் மாநகரசபை, கொழும்புத்துறை கோவிற்பற்று, சுண்டிக்குழி பகுதி, கிராமசேவகர் பிரிவு சுண்டிக்குழி வடக்கு J/76.

"பழைய பூங்கா" ஏக்கர்-27 (A27-R0-P0) இது 28/12/2004 ம் திகதி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் K.கனகசபை 1973/04 ம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.

இது தற்போது 9.671 Hectares (23.89 Acres) என 23/11/2019 ம் திகதி சிரேஷ்ட நில அளவை கண்காணிப்பாளர் YA/JFF/ 2019/ 297ம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப்படத்தில் துண்டுகள் A,B,C,D,E,F,G, H,I,J,K,L,M,N,O,P,Q,R,S,T and U என்பன காணிகள், கட்டங்கள் மற்றும் அதற்கு சேர்ந்தவைகளும்.

இதன் எல்லைகள்:-

கிழக்கு :-ஜயவீரசிங்கம், அருளம்பலம் ஜெயவீரசிங்கம் மற்றும் ஆர்த்தி தவநாதன் மற்றும் வீதி மற்றும் சண்முகநாதன் பத்மாவதி மற்றும் சின்னத்துரை குருபராஜ் க்கு சொந்தமான ஆதனம்
வடக்கு :-நீர் வழங்கல் சபையின் தங்குமிடம் மற்றும் வனவள திணைக்களத்திற்கு சொந்தமான ஆதனம் மற்றும் A9 வீதி

மேற்கு :-பழைய பூங்கா வீதி
தெற்கு :-C.S. சபாபதிப்பிள்ளை பெஞ்சமின் கிளேரியன் மிஷன் மற்றும் முன் ஒழுங்கை

**நீதிமன்ற கட்டளையின் படி**

**2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி**

**ஒப்பமிடப்பட்டுள்ளது**
**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்**
**யாழ்ப்பாணம்**
**நபர் முத்திரை இடப்பட்டுள்ளது.**

(6100)

# ரூ.400 மில்லியன் பெறுமதியான உதவிப் பொருட்களுடன் வந்த சீன விமானம்

(கொழும்பு)

பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மக்களுக்காக சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 400 மில்லியன் ரூபாய் பெறுமதியான மனிதாபிமான உதவித் தொகை நேற்றுக் காலை சீன சரக்கு விமானம் மூலம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டது.

நிவாரணப் பொருட்களில் 84,525 கிலோ கிராம் எடையுள்ள லைஃப் ஜாக்கெட்டுகள், கூடாரங்கள், போர்வைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகியவை அடங்கும்.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலகா, பாதுகாப்பு துணை அமைச்சர் அருண ஜெயசேகர மற்றும் இலங்கைக்கான சீனத் தூதர் குய் ஜென்ஹோங் உள்ளிட்ட ஒரு பெரிய குழு உதவியைப் பெறுவதற்காக விமான நிலையத்திற்கு வந்திருந்ததாகவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வழிப்படி காரியங்கள் செய்யும் அழகிய வாழ்க்கை வாழுங்கள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மலையகத் தமிழ் மக்களை வடக்கில் குடியேற்றுங்கள்

நாட்டில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரால் மலையக மக்கள் பேரிழப்பைச் சந்தித்துள்ளனர்.

குறிப்பாக மழை காலத்தில் அங்கு மண்சரிவு ஏற்படுவதும் மக்கள் பலியாகுவதும் மலையகத்தின் துயரமாக நீடிக்கிறது.

நிலைமை இதுவாக இருந்தும் அந்தத் துயரோடு வாழுகின்ற அவலம் இன்னமும் நீடிக்கிறதெனில், அதற்குக் காரணம் மலையகத்தை விட்டால் அவர்களுக்கு வாழ்விடம் ஏதுமில்லை என்பதாலாகும்.

அதேநேரம் மலையகத்தில் மண்சரிவு ஏற்படுகின்ற இடங்களில் குடியிருக்கின்ற அத்தனை குடும்பங்களையும் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவது கட்டாயமானதாகிறது.

இதுவிடயத்தில் தற்போதைய அரசாங்கம் தீவிரமாகச் செயற்படும் என நம்பலாம்.

இங்குதான் மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில் குடியிருக்கின்ற எங்கள் மலையகத் தமிழ் மக்களை எங்கள் வடபகுதியில் குடியமர்த்துவதற்கு நாம் வழி செய்ய வேண்டும்.

ஆம், மலையகத் தமிழ் மக்கள் விரும்பும் பட்சத்தில்; அவர்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் குடியிருத்துவது பற்றிச் சிந்திப்பது காலத்தின் கட்டாயமாகும்.

ஆம், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் இருக்கக்கூடிய அரச காணிகளை மலையகத் தமிழ் மக்களுக்கு வழங்கி அவர்களை இங்கு குடியமர்த்துவது சாலப்பெருத்தமான செயற்பாடு.

இவ்வாறு மலையகத் தமிழ் மக்களை வடபகுதியில் குடியமர்த்துவதன் மூலம், அந்த மக்களுக்கு உயிர்ப்பாதுகாப்பு அளிப்பதுடன் மக்கள் தொகை குறைந்து வருகின்ற எங்கள் வடமாகாணத்தில் அவர்களின் குடியமர்வு ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்கும் பல வழிகளில் சாதகமாக அமையும்.

உண்மை. தற்போது வடபகுதியில் விவசாயச் செய்கையில் ஈடுபடுகின்றவர்களின் தொகை கணிசமாகக் குறைந்து வருகிறது.

அதேநேரம் மலையகத் தமிழ் மக்கள் விவசாயத்திலும் கால்நடை வளர்ப்பிலும் தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளனர்.

எனவே அவர்களை நீர்வளம் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் குடியிருத்துவதன் மூலம் குறித்த மாவட்டங்களில் பயன்பாடற்ற காணிகள் பயிர் செய் நிலங்களாக மாற்றமடையும் வாய்ப்பு உண்டு.

கூடவே அவர்களின் ஆற்றல் – அவர்களின் கடினமான உழைப்பு எங்கள் வடபகுதியைச் செழுமைப்படுத்தும்.

தவிர, மலையகத் தமிழ் மக்களை வடக்கு மாகாணத்தில் குடியமர்த்துவதன் மூலம் எங்கள் பாடசாலைகளிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் கல்விக்கான வள ஒதுக்கீடுகளும் எமது மாகாணத்துக்கு அதிகமாகக் கிடைப்பதற்கு வழிவகுக்கும்.

ஆகையால், இதுவிடயத்தில் எங்கள் தமிழ்த் தரப்புகள் உடனடியாக ஜனாதிபதியைச் சந்தித்து நிலைமைகளை எடுத்துக்கூறி, வடபகுதியில் உள்ள அரச காணிகளை மலையகத் தமிழ் மக்களுக்கு வழங்கி அவர்களை இங்கு குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது காலச் சூழலை தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்வதாக இருக்கும்.

# பேரழிவுகள் மீண்டும் நிகழாதிருக்க நீண்டகாலத் திட்டங்கள் அவசியம்

## ஜனாதிபதி அநுர வலியுறுத்து

எதிர்காலத்தில் பாரிய அளவிலான இயற்கைப் பேரழிவுகள் மீண்டும் நிகழாமல் தடுக்க நீண்டகாலத்திட்டம் அவசியம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

பேரிடர்சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள குருநாகல் மாவட்டத்தில் இயல்புநிலையை மீட்டெடுப்பதற்கும் மறுஆய்வு செய்வதற்காகவும் குருநாகல் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சிறப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தின் போது நெருக்கடியை எதிர்கொள்வதில் ஒன்றிணைந்து பணியாற்றிய பொது அதிகாரிகள், பொலிஸார் மற்றும் முப்படை வீரர்கள் உட்பட அனைவருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட அத்தியாவசிய உட்கட்டமைப்புகளை மீட்டெடுப்பது, மின்சாரம் மற்றும் நீர் வழங்கல், தொலைத்தொடர்பு மற்றும் நீர்ப்பாசன அமைப்புகள் - விவசாய நிலங்களை மீண்டும் பயிரிடுதல், விவசாய நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குதல், சுகாதார சேவைகளை மீட்டெடுப்பது, பாடசாலைகளை மீண்டும் திறப்பது மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு வசதி செய்வது குறித்து இந்த சந்திப்பின் போது விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றன. (ம-7)

## ஊர்காவற்துறை பிரதேச சபையின் பாதீடு இரண்டாவது தடவையாக தோல்வி

ஊர்காவற்துறை பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

ஊர்காவற்துறை பிரதேசபையின் முதலாவது பாதீடு கடந்த 24 ஆம் திகதி தோற்கடிக்கப்பட்ட நிலையில் குறித்த பாதீட்டை மீண்டும் சபையில் நிறைவேற்றுவதற்கான விசேட அமர்வு நேற்று (8) அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தவிசாளர் அன்னராசா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சபையின் வருமானம் ஊடாக முன்னெடுக்கப்படும் திட்டங்கள், உதவி கோரியுள்ள முன்மொழிவுகள், சிறப்பு வருவாய் முயற்சிகள் உள்ளிட்ட பல திருத்தங்களுடன் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு இரண்டாவது தடவையாகவும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில் மக்கள் நலனோ தற்போதைய தேவை கருதிய நடைமுறைக்கு ஏற்றதோ இல்லாது குறித்த பாதீடு மீண்டும் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் நடைமுறைக்குச் சாத்தியமான விடையங்களை உதாசீனம் செய்துள்ளதாகவும் கூறி உறுப்பினர்கள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தனர்.

வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் பாதீட்டை நிறைவேற்றும் பொருட்டு தவிசாளரால் சபையில் வாக்கெடுப்புக்கு இரண்டாவது தடவையாகவும் விடப்பட்டது.

பாதீட்டை நிறைவேற்றுவதற்காக விடப்பட்ட வாக்கெடுப்பின் போது எதிராக 8 வாக்குகளும் ஆதரவாக 5 வாக்குகளும் கிடைக்கப்பெற்ற நிலையில் குறித்த பாதீடு மேலதிக 3 வாக்குகளால் தோற்கடிக்கப்படுள்ளது.

உள்ளூராட்சி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் இரண்டாவது தடவையும் பாதீடு தோற்கடிக்கப்பட்டால் அது தவிசாளரது தன்னிச்சையான சிறப்பு அதிகாரத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு செயலாக்கம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-7,33,104)

## அணையா விளக்கு தூபி சேதப்படுத்தப்பட்டமைக்கு

### அமைச்சர் சந்திரசேகர் கண்டனம்

செம்மணியில் அமைந்துள்ள அணையா விளக்கு நினைவுத் தூபி சேதப்படுத்தப்பட்ட நடவடிக்கை குறித்து கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளையும் வரலாற்று நினைவுகளையும் பிரதிபலிக்கும் முக்கியமான அடையாளமாக அமைந்துள்ள இத்தூபியைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட சேதம், சமூக ஒற்றுமைக்கும் ஜனநாயக மதிப்புகளுக்கும் எதிரானது என அவர் குறிப்பிட்டார்.

இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்டவர்களை விரைவில் அடையாளம் காண வேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் அதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் அமைதி மற்றும் சமூக ஒற்றுமையை எந்த விதமான எதிர் விளைவுகளும் பாதிக்க அரசு அனுமதிக்காது.

மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் இப்படியான நடவடிக்கைகளைத் தடுக்க சமூக ஒத்துழைப்பும் அவசியம்எனவும் அமைச்சர் சந்திரசேகர் வலியுறுத்தினார். (ம-7,33)

## வட்டுக்கோட்டையில் வாளுடன் கைதானவர் விளக்கமறியலில்

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதலி கோவில் பகுதியில் வாளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் வாளுடன் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தினர். இதன் போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-7,104)

## ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 14 சந்தேகநபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை 2026 மார்ச் 16 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம நேற்றுத் திங்கட்கிழமை (08) உத்தரவிட்டார்.

பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் நெடுஞ்சாலை கட்டளைச் சட்டத்தை மீறி, சந்தேகநபர்கள் சுதந்திர சதுக்கத்திற்கு அருகில் சட்டவிரோத தெரு நாடகத்தை 2022 நவம்பர் 14 ஆம் திகதியன்று நடத்தியதாகக் கூறி கறுவாத்தோட்டம் பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கு அழைக்கப்பட்டபோது, கோப்பு அறிவுறுத்தல்களுக்காக சட்டமா அதிபரிடம் அனுப்பப்பட்டுள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

உண்மைகளைக் கருத்தில் கொண்டு சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களுக்காக வழக்கை மார்ச் 16 ஆம் திகதிக்கு பிரதான நீதிவான் ஒத்திவைத்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை
# பொது அறிவித்தல் - 2026

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள்/ தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நடைமுறைகளைப் பின்பற்றத் தவறுபவர்கள் மீது 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

**1. படவரைஞராக பதிவு செய்தல்.**

1.1. 2026 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்வதற்கும், புதுப்பித்து கொள்வதற்கும், எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**2. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2026**

2.1.1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 149,150,151 ஆம் உப பிரிவுக்கு அமைவாக இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2026 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தைத் தமது பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று அதனை பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு, உடையார்கட்டு, திருமுறிகண்டி உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரியகட்டணங்களை 2026.03.31 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுகொள்கின்றேன்.

2.2.தற்காலிக வியாபாரம் வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் தற்காலிக வியாபாரம் செய்வதாயின் அந்நிலத்திற்கு சொந்தமான திணைக்களத்திடம் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**3. வீடமைப்பு நகரசீர்திருத்தம் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1.புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார், அரசசார்பு கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள், பாலம் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளை அனுமதி இன்றி செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத் தருகின்றேன்.

3.2.ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கபடாத பட்சத்தில் புதுப்பித்தல் வேண்டும்.

3.3.சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் (COC) பெற்றுக் கொள்ளவேண்டும்.

3.4.அனுமதியின்றி கட்டடம் கட்டுவோர் மீது, பிரதேசசபைச்சட்டம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் 2026ஆம் ஆண்டு வர்த்தமானி பிரசுரத்திற்கமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) - 2026**

4.1.மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் அவர்களால், 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், 2264/18 ஆம் இலக்கம் மற்றும் 2022.01.27ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் பாகம் ஈ இல் விதந்துரைக்கபட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு மேற்குறிப்பிட்ட சட்டத்திற்கு இணங்க வியாபாரத்தை, தொழிலை மேற்கொள்கின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே குறித்த வியாபாரத்தை, தொழிலை மேற்கொள்பவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக்கொள்ளவும் உரிமம் பெற்றுள்ளவர்கள் காலாவதியாகும் திகதிக்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பித்து உரிமத்தை புதுப்பித்துக்கொள்ளவும் வேண்டும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2026 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

**5. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

5.1. 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) பிரிவிற்கு அமைவான துணைவிதியின் பிரகாரம் இப் பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 31.03.2026 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடனான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள விளம்பரங்களுக்குப் பிரதேசசபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத விளம்பரப்பலகைகள் பிரதேசசபையால் முன்னறிவித்தலின்றி அகற்றப்படும்.

**6. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அண்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி வகைகள் விற்பனையைத் தடைசெய்தல்.**

6.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 1.5 கி.மீ வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ, வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**7. கழிவுகளை அகற்றுதல் தொடர்பான அறிவித்தல்**

7.1. 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருட்களை அனுமதியின்றிக் கொண்டுசெல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடை செய்யபட்டுள்ளது. தவறின் பிரதேசசபை சட்டம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

7.2. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வாய்க்கால்களிலும், வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களைப் போடுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மீறி செயற்படில் சுற்றாடல் பொலிஸ்மூலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தங்களிடம் சேரும் அகற்றமுடியாதுள்ள கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி சபையின் கழிவகற்றல் வாகனம் மூலம் அகற்றிக்கொள்ள முடியும். மேலும் கழிவுப்பொருட்களில் பிளாஸ்ரிக், கண்ணாடி, உக்காத பொருட்கள் போன்றவற்றினை வேறுபடுத்தி பிரதேச சபையின் உப அலுவலகங்களில் கழிவு சேகரிக்கும் நிலையத்தில் கையளிக்கப்படல் வேண்டும். உக்கும் கழிவுகளைத் தாங்களே அகற்றிக்கொள்ளுதல் வேண்டும்.

**8. பொதுசுகாதாரம் பேணுதல்.**

8.1. 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும், பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**9. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்**

9.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 66(1) ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிக் கால்நடைகளை கட்டுப்படுத்தி உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதிகளில் பகல், இரவு நேரங்களிலும் ஏனைய வீதிகளில் இரவு நேரத்திலும் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகள் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டு பிடிகூலி, தண்டப்பணம் அறவிடப்படும் என்பதுடன் செலுத்தத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**10. சபை எல்லைக்குள் வழியுரிமம், தரிப்பிட கட்டணம்**

10.1. 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 68ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் கல், ஆற்றுமணல், கிரவல் என்பவற்றுக்கான வழி அனுமதி குறித்த உப அலுவலங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

10.2. சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான தரிப்பிட அனுமதி குறித்த உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

**11. இறந்தவர்களின் உடல்களை தகனம், நல்லடக்கம் செய்தல்.**

சுடுகாடுகள், இடுகாடுகள் சட்டத்திற்கமைய புதுக்குடியிருப்பு சபை எல்லைக்குள் உள்ள சுடுகாடுகள் இடுகாடுகளில் இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதற்கு அல்லது புதைப்பதற்கு பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய எமது பிரதேச சபையால் கையளிப்பு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களில் கட்டணத்தைச் செலுத்தி நல்லடக்கம் செய்தல் வேண்டும். சிவநகர், புதுக்குடியிருப்பு பொது மயானத்தில் நல்லடக்கம் செய்வதற்கான கட்டணத்தினை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உப அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும்.

**12. நீர் வழங்கல் சேவை**

பொது மக்கள் தங்கள் வீட்டில் விசேட நிகழ்வுகளுக்கு குடிநீர் தேவைப்படில் பிரதேச சபையில் கட்டணம் செலுத்துவதன்மூலம் குடிநீரினைப்பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**13. கனரக வாகன சேவை**

கலிபவுசர், றோலர், JCB, மோட்டார் கிறேடர் போன்ற கனரக வாகனங்களின் சேவைகளைப் பெறுவதற்கு சபையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்தி வாகன சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**14. மரணச்சடங்குகளின்போது வீதிகள், சந்திகளில் பட்டாசு வெடிப்பதற்கு தடை**

மரணச்சடங்குகளின்போது வீதிகள், சந்திகளில் பட்டாசு வெடிப்பதற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

**15. ஆதனவரி விதித்து அறவிடல்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1),(2),(3) பிரிவின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள கட்டமைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் இவ் ஆண்டில் அடைந்துள்ள அபிவிருத்திக்கு ஏற்ப இனங்காணப்பட்டு எதிர்வரும் ஆண்டிலிருந்து (2026) மதிப்பிடப்பட்ட ஆதனங்களுக்குரிய பெறுமதிக்கு ஏற்ப ஆதனவரியினை 6% ஆக அறவிடுவதற்காக 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் சபை அமர்வு தீர்மான இலக்கம் PTKPS/2025/60 இற்கு அமைவாக ஆதனவரி அறவிடப்படும்.

**வே.கரிகாலன், தவிசாளர்,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**

(C-4527)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலணியை நியமிப்பதற்கான அமைச்சரவை அனுமதி தற்போது கிடைத்துள்ளதுடன், இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நிவாரணப் பணி...

தாக கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியில் கிராம உத்தியோகத்தர்கள் சுயாதீனமாகச் செயற்படுவதைத் தடுத்தால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டியிருக்கும் என்று இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நிவாரணப் பணிகளை சுயாதீனமாக மேற்கொள்வதில் கிராம உத்தியோகத்தர்கள் மீது பல்வேறு அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் நந்தன ரணசிங்க தெரிவித்தார். (ம-7)

## பொதுப் போக்கு...

சாங்கத்தின் எதிர்பார்ப்பு என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பொதுப் போக்குவரத்தை நூறு வீதம் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது சிரமம் என்றாலும், ஏறக்குறைய அனைத்து வீதிகளிலும் பேருந்து சேவைகளை டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பித்து, மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இதேவேளை, ரயில் பாதை புனரமைப்புத் தொடர்பான பெருமளவிலான பணிகள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## யாழ்ப்பாணம்...

டின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்குக்கான அடிக்கல் பழைய பூங்கா வளாகத்தில் அண்மையில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களால் நாட்டப்பட்டது.

இந்நிலையில், பழைய பூங்காவுக்கு மத்தியில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைத்தல் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் என்ற பெயரில் நடைபெறும் சகல நடவடிக்கைகளுக்கும் எதிராக கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் அண்மையில் இடைக்கால தடைக் கட்டாணை ஒன்றை வழங்கியது.

இந்நிலையில் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு தேவை என்பதை வலியுறுத்தி விளையாட்டு துறைசார்ந்தவர்கள் நேற்று பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

சென்.ஜோன் போஸ்கோ ஆரம்ப பாடசாலை முன்பாக கூடிய போராட்டக்காரர்கள் அங்கிருந்து பேரணியாக பழைய பூங்கா பகுதிக்கு சென்று அப்பகுதியைப் பார்வையிட்டதுடன் இறுதியில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு சென்று ஜனாதிபதிக்கான மகஜரை மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபனிடம் கையளித்தனர். (ம-7,33)

## நிவாரணப் பொதி...

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்க அரசின் நிவாரண பொதிகளுடன் கூடிய அமெரிக்க விமானம் ஒன்று நேற்றுக் காலை தரையிறங்கியது.

குறித்த நிவாரண பொதிகள் அமெரிக்க இராணுவத்தினரால் இலங்கை விமானப்படை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

இதனொரு கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கான நிவாரணப் பொதிகள் நேற்று மதியம் மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபனிடம் விமானப் படை அதிகாரிகளால் கையளிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்துக்கென 192 பிரீமா நூடில்ஸ் பெட்டிகளும் 150 கோதுமை மா மூடைகளும் கையளிக்கப்பட்டது. (ம-33)

## அனர்த்த...

ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அனர்த்த நிவாரணப் பணிகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான ஒரு முக்கியமான நடவடிக்கையாக இந்த உயர்மட்ட தேசியக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## டிசம்பர் 16...

அதிகாரிகள் (தேசிய மற்றும் மாகாண) அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தின்போது பின்வரும் தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

அதன் படி, "அனைத்து தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளும்டிசம்பர் 16ஆம் திகதி அன்று திறக்கப்பட வேண்டும். அன்று திறக்க முடியாத பாடசாலைகளுக்கான தொடக்க நாளை நிர்ணயிக்கும் அதிகாரம் பாடசாலை அதிபர்களுக்கும் மாகாண, வலய கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.

டிசம்பர் 16 அன்று ஆரம்பிக்கும் பாடசாலைகளுக்கு வருட இறுதி விடுமுறை டிசம்பர் 23 முதல் வழங்கப்படும். டிசம்பர் 16 முதல் 22 வரையான காலப்பகுதியில் பாடசாலை சுத்தம், பராமரிப்பு, மீளமைப்பு பணிகள், வெள்ளப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மாணவர்களை அடையாளம் காணல், அவர்களுக்கு தேவையான மனநல மற்றும் பிற நலத் திட்ட உதவிகளை ஏற்பாடு செய்தல் அல்லது சம்பந்தப்பட்ட இடங்களுக்கு பரிந்துரை செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். அனைத்துபாடசாலைகளுக்கும் 2026ஆம் கல்வியாண்டு ஜனவரி 01அன்று தொடங்கப்படும். கல்வியாண்டு தொடங்கியவுடன், 2025 சாதாரண தரப் பரீட்சைக்கு (O/L) தோற்றும் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் தவணைப் பரீட்சை நடத்தப்படும்.

பிற வகுப்புகளுக்கான தவணைப் பரீட்சைகளை நடத்த வேண்டுமா என்பதற்கான முடிவு அதிபர் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு ஒப்படைக்கப்படுகிறது.

பரீட்சை நடத்தப்பட்டாலோ இல்லையோ, அனைத்து மாணவர்களும் அடுத்த வகுப்பிற்குத் தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

2025 ஆம் ஆண்டுக்கான உயர்தர மீதமுள்ள பாட பரீட்சைகளுக்கான கால அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு, 2026ஆம்கல்வியாண்டு ஆரம்பிக்கும் நாள் மற்றும் வருடாந்த கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்." (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.12.08 — சீட்டிழுப்பு இலக்கம் 6037 — W 1 3 4 0 6 3

சுப தவசக் — 2025.12.08 — 8153 — கடகம் 10 27 55 — 1513

தன நிதானய — திகதி -2025.12.08 — சீட்டிழுப்பு இலக்கம் - 2067 — L 24 55 56 61 L

மெகா பவர் — திகதி 08/12/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2385 — O 20 15 28 39 70

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4279 — சீட்டிழுப்பு திகதி 08.12.2025 — D 04 19 54 74 — D

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.12.08 — சீட்டிழுப்பு இலக்கம் 1346 — கன்னி 02 39 49 62 கன்னி

உத்தியோகபூர்வ முடிவுகள் — 08.12.2025 — வெற்றி வாரம் 0745 — C 0 3 1 8 2 5 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,042,359.60 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3011 — சீட்டிழுப்பு திகதி 2025.12.08 — தினம் திங்கட்கிழமை — 04 12 17 52 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,892,033.60 — DLB

சனிதா — திகதி 08.12.2025 — வெற்றி வாரம் 5172 — 05 15 43 60 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,437,788.40 — DLB

சசிரி — 841 — 08.12.2025 — திங்கட்கிழமை — 03 18 46 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,138,960.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4723 — சீட்டிழுப்பு திகதி 08.12.2025 — தினம் திங்கட்கிழமை — 10 30 44 49 — கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — E 01 63 68 69 71 — 2187 — 08.12.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.611,622,714.40 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் : 2837 — சீட்டிழுப்பு திகதி : 2025.12.08 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,119,401.60 — 18 21 40 44 I — DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4528)

076 825 7716 (ஆகாஸ்)



## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3580/-
11-16 Kg 2610/-
21-22 Kg 2380/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில்-Delivery (C-4529)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2170/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- முதல் 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4529)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com



## சுபமாங்கல்யம் திருமண சேவை

Suba Mangalyam

உங்களது எதிர்பார்ப்புகளுக்கேற்ப பொருத்தமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை எம் திருமண சேவையினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு
076 387 7425
Palaly Road, Thirunelveli.
www.subamangalyam.com
(1780)


## காணவில்லை

நேற்று (08.12.2025) யாழ். நல்லூர் - நாவலர் வீதிக்கு இடைப்பட்ட பகுதியில் NP BII 3363 எனும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (6101)

077 120 3751

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நவக்கிரி மெயின் றோட்டுடன் 38 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் – புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியுடன்
- செம்மண் தரை, நிலப்பரப்பு, குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நிலாவரைக்கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 10 Km

(1782)

தொடர்புகளுக்கு:
076 860 2770
076 987 8617

## உடனடி வேலைவாய்ப்பு

காங்கேசன்துறையில் அமைந்துள்ள பிரபல விருந்தினர் விடுதிக்கு பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.

- வரவேற்பாளர் (வண்) Receptionist ஆங்கிலம், தமிழ் பேசத் தெரிந்தவர்
- விருந்தினர் வரவேற்பு அதிகாரி (ஆண்) (Guest Relation Officer)
- வெளிப்புற சுத்திகரிப்பாளர் (ஆண்)

(6099)

உணவு, பிரசலுகைகளும் வழங்கப்படும்.

தொடர்பு: 077 935 2234
076 825 5578

## துப்பரவுத் தொழிலாளர் தேவை

கோண்டாவிலில் உள்ள கோவில் ஒன்றிற்கு துப்பரவுத் தொழிலாளர் தேவை.
வயது : 25 – 50 (6072)

075 759 9546


## யாழ்ப்பாணத்தில் Voyzant

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்

- விமான பயணச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதி
- விசா சேவைகள்
- வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(C-4492)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம் 29 . 07 . 1937

மறைவு 10 . 11 . 2025

கடந்த 10.11.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் தெய்வம்

### அமரர் சொக்கலிங்கம் ஐயாத்துரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.12.2025) செவ்வாய்க் கிழமை அதிகாலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அமைந்துள்ள அந்தியேட்டிமடத்தில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து நாளை (10.12.2025) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை (6098)

தகவல்: குடும்பத்தினர்

## 31ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 10.11.2025 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் குருநாதர் இலகவகுமார்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 08.12.2025 திங்கட்கிழமையன்று காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி புனித நீரில் கரைக்கப்பட்டது. நாளை 10.12.2025 புதன்கிழமையன்று பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இலக்கம் 101,
அணிஞ்சியன் குளம்,
மல்லாவி. (6097)

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே:- 0777143399 / 0779081406

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, [illegible] றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org